# பாடுங் குயில்கள்

## ஏழாம் வகுப்பு

(துணைப்பாட நூல்)

கவியரசு முடியரசன்

# பாடுங் குயில்கள்

## ஏழாம் வகுப்பு

(துணைப்பாட நூல்)

கவியரசு
முடியரசன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
நான்காம் பதிப்பு—1975

Printed at Lalita Publication & Press, Madras-600034.

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | இசைக்குயில் வேதநாயகர் | ... | 1-29 |
| | அ. இளமைப் பருவம் | ... | 1 |
| | ஆ. மொழிபெயர்ப்புப் பணி | ... | 5 |
| | இ. நீதிநாயகர் | ... | 11 |
| | ஈ. சீரிய தொண்டுகள் | ... | 20 |
| | உ. இசைக்குயில் | ... | 25 |
| 2. | மணிக்குயில் தேசிகவிநாயகம் | ... | 30-54 |
| | அ. இளமைப் பருவம் | ... | 31 |
| | ஆ. ஆசிரியப் பணி | ... | 37 |
| | இ. கவிமணியின் நூல்கள் | ... | 41 |
| | ஈ. கவிமணியின் நல்லியல்புகள் | ... | 46 |
| | உ. மணிக்குயில் தேசிகவிநாயகம் | | 50 |
| 3. | விடுதலைக்குயில் பாரதியார் | ... | 55-78 |
| | அ. இளமை வாழ்வு | ... | 56 |
| | ஆ. சென்னை வாழ்வு | .. | 61 |
| | இ. புதுவை வாழ்வு | ... | 67 |
| | ஈ. இறுதி வாழ்வு | ... | 74 |
| 4. | புரட்சிக்குயில் பாரதிதாசன் | ... | 79-99 |
| | அ. கனக சுப்புரத்தினம் | ... | 80 |
| | ஆ. பாரதிதாசன் | ... | 83 |
| | இ. புரட்சிக் குயில் | ... | 87 |
| | ஈ. பாவேந்தர் | ... | 92 |
| | உ. உளப்பாங்கு | ... | 95 |

# 1. இசைக்குயில் வேதநாயகர்
(கி. பி. 1826—1889)

## அ. இளமைப் பருவம்

நம் தாய்மொழியாம் தமிழ்மொழிக்குத் தாழ்வு நேராதவண்ணம், ஒவ்வொரு நூற்றுண்டிலும் பெருமக்கள் பலர் தோன்றி, அதனைக் காத்து வந்துள்ளனர். அவ்வகையில் பத்தொன்பதாம் நூற்றுண்டிலே வள்ளல் இராமலிங்க அடிகள், மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை, பாளையங் கோட்டைக் கிருட்டிணப் பிள்ளை, மாயூரம் வேத நாயகம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார் போன்ற பெருமக்கள் தோன்றிப் பல்லாற்ருனும் தமிழுக்குத் தொண்டு புரிந்துள்ளனர். இத் தமிழ்த் தொண்டர் களுள் வேதநாயகரின் விழுப்புகழை நாம் இங்கே காண்போம்.

### பிறப்பு

'சோழ நாடு சோறுடைத்து' என்று சான்றோ ரால் பாராட்டப்பெற்றது சோழ நாடு. அவ்வாறு புகழப்பெறுவதற்குக் காரணம், அந் நாட்டில் காவிரி யாறு பாய்வதனுல்தான். என்றும் வற்ருமல் நீர் பாயும் தன்மை வாய்ந்தது அக் காவிரி. அது சங்கப் புலவர் பலராலும் பாராட்டப்பெற்றது; 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று ஆழ்வாரால்

வணங்கப்பட்டது. புனிதத்தன்மை வாய்ந்த அக் காவிரிக்கரையில் திரிசிரபுரம் என்னும் திருச்சிராப் பள்ளி அமைந்திருக்கின்றது. இப் பேரூருக்குத் தெற்கே பத்துக்கல் (16 கி. மீட்டர்) தொலைவில் குளத்தூர் என்னும் சிற்றூர் உளது.

குளத்தூரில் வேளாளர் குடும்பங்கள் பல இருந்தன. அவற்றுள் கொங்குராயர் குடி என்ற அரசியல் சிறப்புப்பெற்ற குடும்பம் ஒன்றும் வாழ்ந்தது. அக் குடியில் தோன்றிய மதுரநாயகம் பிள்ளை என்பவர் தமது ஐம்பதாவது வயதில் கிருத்துவ சமயத்தில் சேர்ந்தார். இவருக்குச் சவரிமுத்துப் பிள்ளை என்னும் பெயருடைய பேரர் ஒருவர் இருந்தார்.

கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த மரிய சவரியாப் பிள்ளை என்ற மருத்துவர் ஒருவர் குளத்தூருக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு ஆரோக்கிய மரி யம்மாள் என்ற திருமகளார் இருந்தார். இவ் வம்மையாருக்கும் சவரிமுத்துப் பிள்ளைக்கும் சிறப் புடன் திருமணம் நடந்தேறியது. இல்லற வாழ்வு அறநெறி தவருது நடைபெற்று வந்தபொழுது, அவ்விருவர்க்கும் திருமகனாகக் கி. பி. 1826ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பதினோராம் நாள் வேத நாயகர் தோன்றினர்.

### தொடக்கக் கல்வி

குழந்தை செல்வச் சிறப்புடன் வளர்க்கப் பெற்றது. நாளொரு மேனியும் பொழுதொரு

வண்ணமுமாக வளர்ந்து வந்த வேதநாயகர் குழந்தைப் பருவத்தில் பெற்ருேரிடம் ஆடல், பாடல், கதை முதலியன கற்றுவந்தார்.

வேதநாயகர் குழந்தைப் பருவத்திலேயே கூர்மையான அறிவு படைத்தவராகக் காணப் பட்டார். பள்ளிப் பருவம் அடைந்ததும், பெற்ருேர் இவரைப் பள்ளியில் சேர்க்க முற்பட்டனர். அக் காலத்தில் சிற்றூர்களில் தெருப் பள்ளி அல்லது திண்ணைப் பள்ளி என்று வழங்கும் பள்ளிகளே இருந்தன. அங்கேதான் கல்வி தொடங்கப்பெறும்.

இந்தப் பள்ளிகள் ஆசிரியர் வீட்டுத் திண்ணை களிலே நடைபெறும். குளத்தூரில் இப்படிப் பட்ட தெருப் பள்ளியொன்றில் வேதநாயகரும் சேர்க்கப்பட்டார். பத்து வயது வரை அங்கேயே பயின்ற இவர், நன்மாணக்கர் என்று ஆசிரியராலும் பிறராலும் பாராட்டப் பெற்ருர். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்னும் பழமொழிக் கேற்பக் கல்வியாற்றல், நல்லொழுக்கம் முதலியன இளமைப் பருவத்திலேயே இவரிடம் அரும்புவிடத் தொடங்கின.

உயர்நிலைக் கல்வி

திண்ணைப் பள்ளியில் தேர்ச்சி பெற்ற வேத நாயகர்க்கு, உயர்நிலைக் கல்வி கற்பிக்க விரும்பினர் தந்தையார். ஆனல், அக் கல்வி கற்கத் திரிசிரபுரத் திற்குத்தான் செல்ல வேண்டும். ஆங்கில ஆட்சி யிருந்த அந் நாளில் தமிழ் மாநிலம் இரண்டு

பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. திரிசிரபுரத்தில் தெற்கு மாநில நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அம் மன்றத்தைச் சார்ந்த அலுவலகம் ஒன்றில் தியாகப் பிள்ளை என்னும் பெரியார் ஒருவர் பணி புரிந்துவந்தார். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் வல்லவர் என்பதையறிந்த சவரிமுத்துப் பிள்ளை அவரையணுகிச் செய்தியைத் தெரிவித்தார். வேதநாயகருடைய முகப் பொலிவைக் கண்ட தியாகப் பிள்ளை மனமுவந்து கற்பிக்க இசைந்தார்.

வேதநாயகர் கூரிய மதியுடையவராதலால், ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை ஆர்வத்துடன் ஆழ்ந்து பயின்றார். படிக்க வேண்டுமென்னும் ஆர்வம் இருந்தால்கல்வி எளிதாக வளரும். கல்வியில் ஆர்வம் மட்டும் இல்லையானால், ஆசிரியர் எவ்வளவு முயன்று புகட்டினாலும் மாணவர் உள்ளத்தில் கல்வி படியாது. இவரோ கல்வியில் பேரார்வம் கொண்டவராதலால், எளிதாகவும் விரைவாகவும் இவருள்ளம் பாடங்களைப் பற்றிக்கொண்டது.

ஆங்கிலத்தில் நன்கு பேசவும் எழுதவும் வேதநாயகர் கற்றுக்கொண்டார். இயல்பிலேயே தமிழ்மொழியில் பற்றும் பயிற்சியும் பெற்றிருந்தமையால் தமிழிலும் இவர் சிறப்புற்று விளங்கினார்; இலக்கண இலக்கியங்களில் தெளிந்த அறிவும் பெற்றார். தியாகப் பிள்ளையிடம் பயிலும்பொழுதே கவிதை புனைவதில் இவருள்ளம் நாட்டங் கொண்டது. அப்பொழுதே இவர் அழகிய கவிதைகளை இயற்றத் தொடங்கிவிட்டார். எந்த

நிகழ்ச்சியைக் கண்டாலும் அந் நிகழ்ச்சி இவர்தம் உள்ளத்தில் கவிதை உணர்வைத் தூண்டும்.

வேதநாயகரின் பெரிய தாயார்க்கு அடைக்கல சாமி என்ெெருரு மகன் இருந்தார். அவர் ஓர் அலுவலை முன்னிட்டுத் திரிசிரபுரத்திற்கு வந்திருந்தார். அவர் வருகையை அறிந்த வேதநாயகர், சிறந்த கவிதை யொன்று பாடி அவரை வரவேற்ருர். அடைக்கல சாமியும் அகம் மிக மகிழ்ந்தார். மற்ெருரு சமயம் மைத்துன முறை பூண்ட ஒருவருக்குத் திருமணம் நடைபெற்றது. அத் திருமணத்திற்குச் சென்றிருந்த வேதநாயகர், பொருள் செறிந்த, நகைச்சுவை பொருந்திய பாடலொன்றைப் பாடி மணமக்களை வாழ்த்திஞர். அப் பாடலின் நயத்தையும் நகைச் சுவையையும் அறிந்து அங்கிருந்தோர் வியந்து வேதநாயகரைப் பாராட்டினர். தம் மாணவரின் கவிதைத் திறனை அறிந்த தியாகப்பிள்ளை பெரு மகிழ்வு கொண்டார். இவ்வாறு இருபது வயதுவரை வேதநாயகர் திரிசிரபுரத்திலேயே தங்கிக் கல்வி கற்றுத் தேர்ச்சிபெற்ருர்.

## ஆ. மொழிபெயர்ப்புப் பணி

### வேலை ஏற்பு

கல்வி கற்றுத் தேர்ந்த பின்னர் வேதநாயகர் ஏதேனும் அலுவல் புரிய விழைந்தார். அப்பொழுது திரிசிரபுரத்தில் இருந்த தென் மாநில நீதிமன்றத் தில் கார்டன் துரை என்பவர் நீதிபதியாக இருந் தார். ஆசிரியர் தியாகப் பிள்ளையின் முயற்சியால்

கார்டன் துரையின் அலுவலகத்திலேயே வேத நாயகருக்கு வேலைகிடைத்தது. அலுவலகப்பத்திரங்கள், கணக்குப் புத்தகங்கள் இவற்றைக் காக்கும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பெற்றது. வேத நாயகர் கடமையுணர்ச்சி மிக்கவர்; ஆதலால். இளமையை வீணாக்காமல் சோம்பலின்றிப் பணி புரிந்து வந்தார். இவர் கூரிய மதி படைத்தவராதலின் பத்திரங்களையெல்லாம் செம்மையாகப் படித்து, அரசாங்க அலுவல், ஆட்சிமுறை முதலிய செய்திகளை நன்கு அறிந்துகொண்டார். இவர்தம் அயரா உழைப்பால் அனைவருடைய நல்லெண்ணத்தையும் பெற்றார். இவ்வாறாக இரண்டாண்டுகள் இவர் இப் பணியில் இருந்தார்.

கி. பி. 1850ஆம் ஆண்டு மாவட்ட நீதிமன்றத்திற்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டியிருந்தது. இதனையறிந்த பலரும் விண்ணப்பித்தனர். வேதநாயகரும் விண்ணப்பம் விடுத்தார். அப்பொழுது மாவட்ட நீதிபதியாக இருந்தவர் மேஸ்தர் பாய்லர் துரை என்பவராவர். அவர் நடுநிலையாளர்; விண்ணப்பித்த அனைவரையும் அழைத்தார். தமிழை ஆங்கிலத்திலும் ஆங்கிலத்தைத் தமிழிலும் மொழிபெயர்க்கப் பணித்தார். அனைவருடைய மொழிபெயர்ப்புகளையும் படித்தறிந்த அவர், வேதநாயகருடைய மொழிபெயர்ப்பே சிறந்து விளங்குகிறதென்று முடிவு செய்து, அம் மொழிபெயர்ப்பு வேலையை இவருக்கே தந்தார்.

வேதநாயகர் மகிழ்ச்சியுடன் அப் பணியினை மேற்கொண்டார். நற்பண்புகளுக்கு உறைவிடமாக இவர் விளங்கிய காரணத்தால், அப் பணி மக்களுக்குப் பணியாற்ற ஒரு வாய்ப்பாகும் என்று கருதி, அதனைத் தொடர்ந்தார். அக் காலத்தில் ஆங்கிலேயர் நாடாண்டு வந்தமையால் சட்டங்களும் ஆணைகளும் ஆங்கில மொழியில் இருந்தன. அவற்றைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டியிருந்தது. மக்களுடைய குறைபாடுகள், வழக்குகள் இவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டியிருந்தது. பத்திரங்கள், கடிதங்கள் முதலியவற்றுள் எதனையும் மறுநாளைக்கென ஒதுக்கி வைக்காமல் இவர் அன்றுடம் மொழிபெயர்த்துவிடுவார்.

மாவட்ட நீதிமன்றத்துக்கு மேலாக உயர்நீதிமன்றம் ஒன்று இருந்தது. அது 'சதர் கோர்ட்' என்று வழங்கப்பட்டது. இங்கு வழங்கப்பட்ட தீர்ப்புகளை வழக்குரைஞர் மாவட்ட நீதிமன்றங்களில் எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துவர். இவையனைத்தும் ஆங்கில மொழியில் இருக்கும். அன்றைய வழக்குரைஞர்களுள் பலர் தக்க ஆங்கிலப்புலமை பெருதவர்கள். இத் தீர்ப்புகள் தமிழில் இருந்தால் அனைவருக்கும் பயன்படுமே என்று வேதநாயகர் கருதினுர்; கருதிய அளவில் நில்லாது செயலளவிலும் காட்டத் தொடங்கினுர். இத் தொடக்கமே பின்னர் நூல்வடிவம் பெற்றது. அலுவல் நேரம் போக எஞ்சிய நேரத்தையெல்லாம் இவர் நூல்கள் படிப்பதும் பாடல்கள் இயற்றுவதுமாகப் பயன்படுத்திக்கொண்டார்.

## வேலையிழப்பும் மீட்பும்

கவிதையில் தோய்ந்த நெஞ்சம் பிற பணிகளில் ஈடுபடாது என்றும் சோம்பியிருக்கும் என்றும் சிலர் கூறுவர். ஆனால், கவிஞர் வேதநாயகரோ அதற்கு மாறுபட்டவர். ஏற்றுக்கொண்ட பணியில் இவர் சுறுசுறுப்பாகவே விளங்கினார்; எழுத்து வேலை மிகுதியாக இருந்தமையால், தமக்குத் துணையாக ஒருவரை அமர்த்திக்கொண்டு, தம் பணியினைக் குறையின்றிச் செம்மையாகச் செய்துவந்தார். இச் சமயத்தில் மேஸ்தர் டேவிட்சன் என்பவர் நீதிபதியாக இருந்தார். அவர் வேதநாயகரின் கடமையுணர்ச்சியை அறிந்து மகிழ்ந்து இவரிடம் அன்பும் மதிப்பும் வைத்திருந்தார்.

அப்பொழுது எப்படியோ தமிழ்நாட்டில் சமயப் பூசல் காரணமாகக் கலகம் ஏற்பட்டது. கலகத்தில் ஈடுபட்ட இரு சமயத்தாரும் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கு மாவட்ட நீதிமன்றத்திற்கு வந்தது. அங்கு இவ் வழக்கு முடிவு பெறாத காரணத்தால் மாநில நீதி மன்றத்திற்கு மாற்றப் பட்டது. அதனால் இரு சமயத்தாரும் கொடுத்த விண்ணப்பங்கள், வழக்கு நடைபெறும் பொழுது சொல்லப்படும் கருத்துகள் ஆகிய அனைத்தையும் மொழிபெயர்க்க வேண்டிய பொறுப்பு வேதநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வேதநாயகர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அனைத்தையும் நன்முறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, மேஸ்தர் டேவிட்சனிடம் கொடுத்தார்.

அவர் அவற்றைப் பெற்றுக்கொண்டு கையெழுத்திட்டு அனுப்புவதற்காக வைத்திருந்தார். இச் சமயத்தில் அரசியலார் டேவிட்சனை வேற்றூருக்கு மாற்றிவிட்டனர். விடைபெற்றுச் சென்ற டேவிட்சன் சமயப்பூசல் தொடர்பான மொழிபெயர்ப்புக் கட்டுகளையும் தம்முடன் எடுத்துச் சென்றார்; ஊருக்குப்போனதும் அனைத்திலும் கையெழுத்திட்டு மேலிடத்திற்கு அனுப்புவதாகத் தெரிவித்திருந்தார். சென்ற இடத்திலே எதிர்பாரா வகையில் டேவிட்சன் இறந்துவிட்டார். அதனால் மொழிபெயர்ப்புக் கட்டுகள் மேலிடத்திற்கு அனுப்பப் படாமல் டேவிட்சன் பெட்டிக்குள் சிக்கிவிட்டன.

டேவிட்சனுக்குப் பிறகு கிரீன்வே என்பவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இவர் உயர் குணங்கள் இல்லாதவர்; உண்மையையும் உழைப்பையும் மதியாதவர். இச் சமயத்தில் மாநில நீதி மன்றத்தில் அக் கலக வழக்குவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்பொழுது மாவட்ட நீதி மன்றத்திலிருந்து மொழிபெயர்ப்புக் கட்டுகள் வாராமை கண்டு, காலத் தாழ்விற்குக் காரணம் என்ன என்று மேலிடத்தார் எழுத்துமூலம் கேட்டனர். மேலிடத்தினின்று கேட்டு வந்ததை வைத்துக்கொண்டு, கிரீன்வே எவ்வித விசாரணையுமின்றி வேதநாயகர்மீது குற்றஞ் சுமத்தி, அவரை வேலையிலிருந்து விலக்கிவிட்டார். வேதநாயகர் அவற்றை மொழிபெயர்க்கவில்லையென்றும் அதனால் காலத் தாழ்வு ஏற்பட்டதென்றும், ஆதலினால் அவரை வேலையிலிருந்து விலக்கிவிட நேரிட்ட

தென்றும் கிரீன்வே மேலிடத்துக்கு எழுதியனுப்பி விட்டார்.

வேலை போனதைப்பற்றி வேதநாயகர் வேதனைப்படவில்லை. அதைப் பெரிதாக எண்ணியிருந்தால் அல்லவா இவர் கவலைப்படுவார்?

'இந்தஉத்தி யோகமென்ன பெரிதா?—நெஞ்சே!
இதுபோனுல் நாம்பிழைப்ப தரிதா?'

என்று பாடிச் செம்மாந்திருந்தார். ஆயினும், வீண்பழிக்கன்றோ ஆளானேம் என்ற கவலையால் இவர் நோய்வாய்ப்பட்டார்; அதனுல் உண்மை நிலையை மேலிடத்திற்குத் தெரிவித்தாக வேண்டும் என்று எண்ணினுர்; நடந்தவற்றையெல்லாம் விளக்கி எழுதி அனுப்பினுர். மாதங்கள் பல கழிந்தும் மறுமொழி ஒன்றும் வந்திலது. இவர் மீண்டும் ஒரு விண்ணப்பம் அனுப்பினுர். அதே சமயம் டேவிட்சன் பெட்டியில் இருந்த மொழிபெயர்ப்புக் கட்டு உயர்நீதிமன்றத்தார்க்கு வந்து சேர்ந்தது. உண்மை உணர்ந்த உயர்நீதிமன்றத்தார் வேதநாயகரை வேலையில் சேர்த்துக் கொள்ளுமாறு ஆணை பிறப்பித்தனர்.

இச் சமயத்தில் சுவிண்டன் என்பார் மாவட்ட நீதிபதியாக இருந்தார். இவரும் கிரீன்வேயைப் போன்ற இயல்புடையவராக இருந்தமையால் அவ் வாணையை மதிக்கவில்லை. வேதநாயகர் பிணியாளர் என்றும், வேருெருவரைக்கொண்டே மொழி பெயர்த்து எழுதுகிருர் என்றும் சுவிண்டன் மேலதிகாரிக்கு எழுதியனுப்பினுர். உண்மையைப்

புரிந்துகொண்ட மேலதிகாரி, சுவிண்டனை இலண்டனுக்கு அனுப்பிவிட்டு ஆரிஸ் என்பவரை நீதிபதியாக நியமித்தார். ஆரிஸ் நல்லியல்புகள் மிக்கவர். அதனால் அவர் நீதிபதியாக வந்தவுடன் வேதநாயகரை வேலையில் அமர்த்தினார். பழி துடைக்கப்பட்ட வேதநாயகர் மீண்டும் அப் பணியை ஏற்றுக்கொண்டார்.

இவர்பால் நேர்மையும் தமிழுணர்வும் மிக்கிருந் தமையால், பெரியோர் பலர் இவருக்கு நண்ப ராயினர். அவருள் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் ஒருவராவார். வேலை நேரங் களில் செம்மையாகச் செயலாற்றுவதும், ஏனைய நேரங்களில் மகாவித்துவானுடன் உரையாடி மகிழ்வதுமாக வேதநாயகர் வாழ்ந்துவந்தார்.

## இ. நீதிநாயகர்

### நீதிபதியாதல்

வேதநாயகர்க்கு இயல்பாகவே தமிழ் நெஞ்சம் வாய்த்திருந்தது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் போன்ற புலவர்களின் தொடர்பும் ஏற்பட்டமையால் மேலும்மேலும் தமிழுணர்வு இவரிடம் வளர்வதாயிற்று. அதனால் இவர் தாம் மேற்கொண்ட மொழிபெயர்ப்புப் பணியைவிட இலக்கியப் பணியிலேயே நாட்டம் மிகுந்து காணப் பட்டார். அதனால் சிறந்த நூல்களைக் கற்பதும், புதிய பாடல்களை இயற்றுவதும், தமிழுக்குப்

புதுமை கூட்டவேண்டுமென்று சிந்திப்பதும் இவருடைய தலையாய கடமைகளாக இருந்தன.

இச்சமயத்தில் மாயூரத்தையடுத்துள்ள தரங்கம் பாடி என்னும் ஊரில் மாவட்ட நீதிபதிப் பதவி ஒன்றுக்கு ஆள் வேண்டியிருந்தது. இப் பதவிக் கென அறுபதுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்தன. நீதியிலும் நேர்மையிலும் நம்பிக்கை யுடைய வேதநாயகரும் விண்ணப்பம் அனுப்பி யிருந்தார். அரசினர் வேதநாயகரையே தேர்ந் தெடுத்து மாவட்ட நீதிபதியாக அமர்த்தினர். அப் பதவியை ஏற்றுக்கொண்ட வேதநாயகர், ஆங்கில மும் தமிழும் அறிந்தவராதலின், நடுநிலைமை பிறழாமல் செம்மையுடன் பணியாற்றிவந்தார்.

பின்னர், வேதநாயகர் சீகாழி என்னும் ஊருக்கு மாற்றப்பட்டார். திருஞானசம்பந்தர் தோன்றிய அப் பெரும் பதியிலிருந்து இவர் தமது பணியைச் செம்மையுறச் செய்துவந்தார். பொய் வழக்குகள் தமது நீதிமன்றத்திற்கு வரும்போதெல்லாம் இவர் மனம் வருந்துவார். வழக்குரைஞர்கள் பணம் ஒன்றையே குறியாகக் கொண்டு, தம் கட்சிக் காரருக்காக, மெய்யைப் பொய்யாகவும் பொய்யை மெய்யாகவும் தம் பேச்சுத் திறனுல் மாற்றிமாற்றிப் பேசுவதைக் கண்டபோதெல்லாம் இவர் மனம் புண்படுவதுண்டு. ஏழை மக்கள் வழக்குரைஞர்களை அமர்த்தி வாதாட முடியாமல் துயர்ப்படுவதைக் கண்டு வேதநாயகர் வேதனையடைந்த நாள்கள் பல. அதனுல் வழக்குரைஞர்களின் வாதங்களையும் சாட்சி

களையும் மட்டும் நம்பி வேதநாயகர் தீர்ப்புக் கூறுவதில்லை; பல வழிகளால் உண்மையைத் தெரிந்து கொண்டு நீதி வழங்குவார். நீதி மன்றத்திலே நிகழ்கின்ற இந்தக் கொடுமைகளையெல்லாம் நினைந்துநினைந்து வருந்திப் பாடல்கள் பல பாடிப் பாடித் தம் மன வேதனையை இவர் குறைத்துக் கொள்வார்.

இப் பெருமகனார், 'சமன்செய்து சீர் தூக்குங் கோல்போல்' நின்று, நடுநிலை பிறழாமல் தீர்ப்பு வழங்கி வந்தமைக்கு ஒரு சான்று காணலாம். ஒரு சமயம் வாதியொருவன், இவருடைய நீதி மன்றத்திலே பொய் வழக்கொன்று தொடுத்தான். எதிரியின் பக்கந்தான் உண்மையிருந்தது. நீண்ட நாள் வழக்கு நடந்துவந்தது. கட்சிக்காரர் இருவர் சார்பிலும் எடுத்துக் கூறியவற்றையெல்லாம் இவர் நன்கு கவனித்துக் கேட்டுக்கொண்டார். தீர்ப்புச் சொல்லும் நாள் நெருங்கியது. வாதி அஞ்சினான்; தன் வழக்கில் உண்மையில்லாததால் தனக்குத் தோல்வி நேருமோ என்று கருதினான். இப்படிக் கருதிய வாதி, ஒருநாள் வேதநாயகருடைய வீட்டிற்கு வந்தான். வேதநாயகர் தம்முடைய வீடு தேடி வந்தவனை இன்முகங் காட்டி இனியன கூறி வரவேற்றார். வந்தவன் உண்மை முழுதும் கூறித் தன் பக்கம் வெற்றியேற்படும்படி தீர்ப்பு வழங்க வேண்டிக் கையூட்டாக (இலஞ்சம்) நூறு ரூபாயும் கொடுத்தான். வேதநாயகருக்கு ஒரே மகிழ்ச்சி; மறுநாள் தீர்ப்பு வழங்குவதற்குத் தக்க சான்று கிடைத்துவிட்டதல்லவா? இவர் பணத்தைப்

பெற்றுக்கொண்டார். வாதி விடைபெற்றுச் சென்றான்.

மறுநாள் நீதிமன்றம் தொடங்கியது. வாதி மகிழ்ச்சியுடன் வந்திருந்தான். நீதிபதி பேசத் தொடங்கினார். அனைவரும் இவருடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தனர். 'இந்த வழக்கில் உண்மையைக் கண்டுபிடிப்பது உள்ள படியே எனக்குக் கடினமாகத்தான் இருந்தது. நேற்றிரவு வாதி என் வீட்டிற்கு வந்து இலஞ்சம் கொடுத்தபோதுதான் எனக்கு உண்மை வெளிப் படையாகத் தெரிந்தது' என்று கூறி, வாதி முதல் நாள் தம்மிடம் தந்த பணத்தையும் வேதநாயகர் எடுத்துக் காட்டினார். அப்போது நீதி மன்றமே நடுங்கிவிட்டது. 'ஆகவே, நீதியை எதிரிக்கும், மன்னிப்பை வாதிக்கும் அளிக்கின்றேன்' என்று இவர் தீர்ப்பு வழங்கி, அந்தப் பணத்தை எதிரிக்கு அன்பளிப்பாகக் கொடுத்தனுப்பினார். இத் தீர்ப்பு நகர் முழுமையும் பரவியது. நீதிநாயகராகிய வேதநாயகரின் புகழும் எங்கும் பரவியது.

நீதிநூல் படைத்தல்

வேதநாயகர் மக்களிடம் காணப்படுகின்ற குற்றங்குறைகளைக் காண நேர்ந்தபோதெல்லாம் மனம் வருந்துவார். மக்கள் இவ்வாறு தீய வழிகளிற் சென்று மடிகின்றனரே! இவர்களை எவ்வாறு நல்வழியில் திருப்புவது ? என்று அடிக்கடி சிந்தனை செய்துகொண்டேயிருப்பார். கவிஞருடைய சிந்தனை வெளிப்படுமானால், அது கவிதை வடிவிலே

தான் வெளிப்படும். இவர்தம் காலத்திலே வாழ்ந்த மக்களுக்கேற்பப் பல அறநெறிகளையமைத்துப் பாடல்களைப் பாடிவைத்தார்.

இச் சமயத்தில் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரனுரும் உடனிருந்தால் பேருதவியாக இருக்குமே என்று இவர் கருதினுர்; அதனுல் மகாவித்துவான் அவர்களும் சீகாழியில் தங்குவதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தார். அடிக்கடி வேதநாயகரும் மகாவித்துவான் அவர்களும் கூடி, அறநெறிப் பாடல்களைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள். பத்தொன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்த மக்களின் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ற வகையில், உயர்ந்த நெறிகளைப் புகட்டுகின்ற நானூறு பாடல்களை இவர் பாடி முடித்தார்; அந் நூலுக்கு 'நீதிநூல்' என்று பெயரிட்டார். மகாவித்துவான் மீனுட்சி சுந்தரனுர் இந் நூலைப் படித்து மகிழ்ந்து, பாராட்டுக் கவி பாடித் தந்தார். இவ்வாறு வேதநாயகர் நீதிமன்றத்தில் நாயகராக விளங்கியதோடு, மிகச் சிறந்த நீதிநூலுக்கும் நாயகராகி, நீதிநாயகர் என்று அனைவரும் பாராட்டும்வண்ணம் வாழ்ந்து வந்தார்.

மாயூர வாழ்க்கை

இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரனுர் மாயூரத்திற்குச் சென்று தங்க நேர்ந்தது. அவரைப் பிரிந்த வேதநாயகர், நல்ல நண்பரை விட்டுப் பிரிந்திருக்க நேர்ந்ததே என்று வருந்தியிருந்தார். பிரிவால்

வாடியிருந்த புலவர் இருவரும் மீண்டும் கூடி வாழும் வாய்ப்பு நேர்ந்தது. கி. பி. 1860ஆம் ஆண்டு, வேதநாயகர் மயிலாடுதுறை என்னும் செந்தமிழ்ப் பெயர்பூண்ட மாயூரத்திற்கு நீதிபதியாக மாற்றம் பெற்ருர். இவ்வூரில் இவர் பதின்மூன்ருண்டுகள் பணி புரிந்தார்; ஓய்வு பெற்ற பின்னரும் இங்கேயே தங்கி இறுதிவரை வாழ்ந்தார். இவர் குளத்தூரில் பிறந்தார்; திரிசிரபுரம், தரங்கம்பாடி, சீகாழி முதலிய ஊர்களில் பணிபுரிந்தார். ஆயினும் இவர், 'மாயூரம் வேதநாயகர்' என்றே அழைக்கப் பெற்ருர். அந்த அளவிற்கு அவ்வூருடன் இவர் ஒன்றிவிட்டார்.

சீகாழியில் பிரிந்த மகாவித்துவான் மீனுட்சி சுந்தரனரை இவர் மீண்டும் மாயூரத்தில் சந்தித்துப் பழகிவந்தார். வேதநாயகர் இவ்வூரில் பதவியேற்ற பின்புதான் நீதிநூலின் இரண்டாம் பதிப்பு வெளி வந்தது. இவர் மகா வித்துவான் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, மேலும் இருநூறு பாடல் எழுதிச் சேர்த்து, அறுநூறு பாடல்கொண்ட பெரு நூலாக அதனை வெளியிட்டார்.

நீதியிலும் நேர்மையிலும் வழுவாது ஒழுகி வந்தமையாலும், நற்குண நற்செயல்கள் மிக்கிருந் தமையாலும், நூலாசிரியராக விளங்கியமையாலும் மக்கள் இவரைப் பலவாறு போற்றிவந்தனர். இவர் தாம் மேற்கொண்ட பணியைச் செவ்வனே யாற்றிவந்தார். அதனுல் உயர்நீதிமன்றத்தாரும் இவரிடம் நல்லெண்ணம் கொண்டிருந்தனர்.

ஒருவர் எவ்வளவு நல்லவராக நடந்துவந்தாலும் அழுக்காறு கொண்டவர்களால் தீமை உண்டாவது வழக்கமாகிவிட்டது. வேதநாயகருக்கும் கீழ்மக்கள் சிலரால் துன்பம் வந்து சேர்ந்தது.

உயர்நீதி மன்றத்திற்கு நெல்சன் என்பவர் புதிய அதிகாரியாக வந்து சேர்ந்தார். கையூட்டுப் பெறும் கயவர் சிலர் நெல்சனை அணுகி வேத நாயகரைப் பற்றிப் பலவாறு பழி சுமத்தினர். நெல்சன் உயர்பண்புகள் இல்லாதவர்; ஆதலினல். பிறர் கூறிய கோள் முழுவதையும் நம்பி, வேத நாயகரைப் பற்றித் தவருன கருத்துக்கொண்டிருந் தார்; இவரை எப்படியும் வேலையிலிருந்து நீக்கி விடுவதெனை முடிவும் செய்துவிட்டார்.

ஒரு நாள் மாயூரம் மாவட்ட நீதிமன்ற அலுவலகத்திற்கு உயர்நீதிமன்ற அதிகாரியாகிய நெல்சன் திடீரென ஆய்வு நடத்த வந்துசேர்ந்தார். அப்பொழுது வேதநாயகர் நோய்வாய்ப்பட்டிருந் தமையால், அலுவலகத்திற்கு வர இயலாமல், வீட்டில் படுத்திருந்தார். தவருன எண்ணத்துடன் வந்திருந்த நெல்சன், அலுவலகத்தில் சோதனை செய்து, சில குறைகளைக் குறித்துக்கொண்டு சென்ருர்; சென்னைக்குச் சென்றதும் அக் குறை களுக்குக் காரணங் கேட்டு எழுதியிருந்தார். வேதநாயகர் நெல்சனின் செயல் கண்டு மனம் வருந்தினுர்; பின்பு அக்குறைகளுக்குத் தகுந்த காரணங்களை விளக்கி எழுதியனுப்பினுர். ஆயினும், நெல்சனுக்கு அக் காரணங்கள் மன நிறைவைத்

தரவில்லை. அதனால் வேதநாயகரை வேலையிலிருந்து விலக்குமாறு நெல்சன் மேலிடத்துக்கு எழுதி அனுப்பிவிட்டார்.

வேதநாயகர் நேர்மையாக நடந்தவர்; மக்களுக்குத் தொண்டுகள் பல புரிந்தவர்; தீய நெறிகளிலிருந்து மக்களை நன்னெறிக்குத் திருப்பவேண்டும் என்று அல்லும்பகலும் நினைத்துக்கொண்டேயிருந்தவர்; பதினாறு ஆண்டுகள் உண்மை ஊழியம் புரிந்தவர். இவையனைத்தும் மேலிடத்தார்க்கு நன்கு தெரியும். ஆயினும், வெள்ளையராகிய நெல்சன் எழுத்துக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று மேலிடத்தார் எண்ணினர்; அதனால் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளுமாறு வேதநாயகருக்கே நேரில் எழுதிவிட்டனர்; வேதநாயகரின் நேர்மையை நன்கு அறிந்திருந்தமையால் ஓய்வு கால ஊதியம் (*Pension*) இறுதிக்காலம் வரை இவர் பெற்றுக்கொள்ளலாம் என்றும் எழுதியிருந்தனர்.

மேலிடத்திலிருந்து வந்த கடிதத்தைப் படித்துவிட்டு, வேதநாயகர் மனத்துக்குள் நகைத்துத் தாம் விலகிக்கொள்வதாக மேலிடத்துக்கு எழுதி அனுப்பிவிட்டார். ஓய்வுகால ஊதியம் கொடுக்க வேண்டா என்று நெல்சன் எழுதியும் மேலிடத்தார் அதனை மதிக்கவில்லை; ஓய்வூதியம் இறுதிக் காலம்வரை கொடுத்துவந்தனர். கவிஞன் உள்ளம் என்றும் கட்டுப்பட்டுக்கிடப்பதை விரும்பவே விரும்பாது; விடுதலைப் பறவையாக வாழவே விரும்பும். வேதநாயகரும் சிறந்த கவிஞராதலின், வேலையிலிருந்து

விடுபட்டதைப் பற்றிக் கவலைப்படவேயில்லை; அடிமைத்தளை அறுபட்டதாகவே கருதினர். அதனைப்பற்றி இவர் பாடியிருக்கும் பாடலே அதற்குச் சான்று பகரும் :

'நீடும்என் சாண்மெய்யை ஓர்சாண்
 உதரம்நிமித் தம்விற்று
நாடும் அரசர் அடிமைஎன்
 றேமுன்பு நாம் கொடுத்த
ஏடு கிழிபட்ட தன்றேஉத்
 யோகம் இழந்ததுவே'

என்று வேதநாயகர் அடிமைச் சீட்டுக் கிழிந்து போய்விட்டதாகவே கருதி மகிழ்ந்து பாடுகிறார்.

வேதநாயகர் ஓய்வு பெற்ற பின்பு, மாயூர நகராட்சி மன்றத் தேர்தல் வந்தது. அவ்வூர் மக்கள் இவருடைய உயர்ந்த பண்புகளையெல்லாம் நன்குணர்ந்த காரணத்தால், பெருமக்கள் பலர் கூடி வேதநாயகரைத் தேர்ந்தெடுப்பதென முடிவு செய்தனர். அப் பெருமக்களின் முயற்சியால் வேதநாயகர் நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட வேதநாயகர் மக்களுக்குத் தொண்டு செய்ய ஒரு வாய்ப்புக் கிட்டியது என்று அதனைக் கருதினர்; பொறுப்போடு கடமையாற்றினர்; நகருக்கு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து, மக்கள் பாராட்டிப் புகழுமாறு நடந்துவந்தார்.

## ஈ. சீரிய தொண்டுகள்

பெண்ணுரிமை, சமயப் பொதுமை ஆகிய கொள்கைகளைப் பொறுத்தவரை இருபதாம் நூற்ருண்டுத் தமிழ்ப் பெரியாராகிய திரு. வி. கலியாண சுந்தரனாரை இவருக்கு ஒப்பாகச் சொல்லலாம். சமய அடிப்படையில் எழுந்த கண்மூடிப் பழக்க வழக்கங்களை அகற்ற வேண்டும் என்பதிலும், சர்வ சமய சமரசத்திலும் இராமலிங்க அடிகளுக்கு நிகராக இவரைச் சொல்லலாம். இத்தகைய பெருமகனார் ஆற்றிய தொண்டுகள் பலவாயினும் குறிப்பிடத்தக்க தொண்டுகளாக இரண்டைக் கூறலாம். ஒன்று சமுதாயத் தொண்டு; மற்ருென்று மொழித் தொண்டு.

### சமுதாயத் தொண்டு

பெண்மையை விடுத்து ஆண்மையும், ஆண்மையை விடுத்துப் பெண்மையும் உயர்வு பெற எண்ணிஞல் அச் சமுதாயம் உருப்பட்டு முன்னேற முடியாது. இரண்டு பண்புகளும் சரிநிகர் சமமாக முன்னேறிஞல்தான் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். சமுதாயம் முன்னேறக் கல்வி இன்றியமையாதது. அக் கல்வியை இருபாலாரும் கற்க வேண்டும் என்பது சான்ருேர் முடிபு. பிற்காலத்தில் பெண்களுக்குக் கல்வி வேண்டுவதில்லை என்னும் ஒரு கருத்து நிலவிவந்தது. அதஞல் பெண்கள் நூலறிவு பெற வழியின்றி, அடிமைகள்போல வாழும் நிலை ஏற்பட்டது.

இந் நிலையைக் கண்ட வேதநாயகர் மனம் நொந்து பெண்கல்வி பரவ வேண்டுமென்று பாடு பட்டார்; தம் கருத்துகளையெல்லாம் பாடல் வாயிலாகவும் உரைநடை வாயிலாகவும் வெளிப் படுத்தினர். ஆண்மக்களுக்குமட்டும் கற்க வாய்ப் பளித்துப் பெண்மக்களுக்குக் கல்வியளிக்க மறுப்பது, நம் உடலில் பாதியை அணிசெய்து, மற்றொரு பாதியை அணியின்றி விடுவதுபோன்ற தாகும். அஃதாவது சமுதாயத்தில் பாதி அழகு பெறும்; பாதி அழகு பெருமல் போய்விடும் என்னும் கருத்தை இவர் வெளிப்படுத்தினர். பெண் கல்விக்காகவும், பெண் நெறிக்காகவும், பெண்ணின் பெருமைக்காகவும், இவர் ஆற்றிய தொண்டு, பிற் காலத் தமிழகத்திலே முதன்முதலாகச் செய்யப் பெற்ற சமூகச் சீர்திருத்தத் தொண்டாகும்; பெருந் தொண்டும் ஆகும்.

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு என்பதே இருத்தல் கூடாது என்று வேதநாயகர் கூறுகிறர். பிறக்கும்போதே மகுடத்துடன் பிறந்தவரும் இல்லை; பிறக்கும்போதே ஓடேந்தும் ஏழையாய்ப் பிறந்தவரும் இல்லை. அதனல் மேலோர் கீழோர் எனப் பேசுவது மடமை' என்று இவர் பாடுகிறர். மற்றோரிடத்தில் செல்வச் செருக்கை நகைச்சுவை யாகவும் கடுமையாகவும் கண்டிக்கின்றர்; 'செல் வர்கள் சிவப்புக்கல், வெள்ளைக்கல், நீலக்கல் என்று சேர்க்கிறர்கள். ஏழையரும் செங்கல், வெண்கல், கருங்கல் என்று சேர்க்கிறர்கள். ஏழைமக்கள் சேர்க்கும் கற்களுக்கே எடை அதிகம்; வலிமையும்

அதிகம்' என்று பாடுகிருர். இவ்வாறு செல்வத்தால் ஏற்றத்தாழ்வு இருத்தல் கூடாது என்னும் கருத்தை இவர் பல பாடல்களால் விவரிக்கின்ருர்.

ஒருசமயம் தமிழ்நாட்டிலே பெரும்பஞ்சம் ஏற்பட்டது. அது, தாது வருடத்திலே ஏற்பட்டமையால், 'தாது வருடப் பஞ்சம்' எனப்பட்டது. அவ்வாண்டில் வானம் பொய்த்தது. மழையே பெய்யவில்லை. மழை பெய்யாமையினுல் விளைச்சல் இல்லை. விளைச்சல் இல்லாமையால் உணவில்லை. உணவின்மையால் மக்கள் பெருந் துன்பத்திற்காளாஞர்கள். எங்கு நோக்கினும் ஒரே அவலநிலை.

எவ்வாறு மக்களுக்கு உதவுவது என்று சிந்தித்து வேதநாயகர் ஒரு முடிவுக்கு வந்தார்; கஞ்சித் தொட்டிகள் வைத்துப் பசியால் வாடிய மக்களுக்குக் கஞ்சி வார்த்து ஓரளவு அவர்களுடைய துன்பத்தைக் களைந்தார்; ஒல்லும் வகையால் அறவினை செய்தார். இஃது இவர் ஆற்றிய சமூகத் தொண்டுகளுள் மிகச் சிறந்ததாகும்.

## மொழித்தொண்டு

வேதநாயகர் இயல்பாகவே தமிழ்ப்புலமை பெற்றிருந்தார். மகாவித்துவான் மீஞட்சிசுந்தரஞர், திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர், பாளையங்கோட்டை எச். ஏ. கிருட்டிணப் பிள்ளை போன்ற பெருமக்கள் தொடர்பால் மேலும் அப்புலமை வளம் பெற்றது. புலமை முதிரமுதிரத் தமிழ்மொழிப் பற்று இவர் நெஞ்சத்தில் வேரூன்றிச் செழித்து வளர்ந்தது. இவர் தமிழைப்

பற்றிக் குறிப்பிடும்பொழுது, 'நம்மைப் பெற்றதும் தமிழ், வளர்த்ததும் தமிழ், நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ், வீட்டு மொழியும் தமிழ், நாட்டு மொழியும் தமிழ்' என்று கூறுகின்றார்.

நம்முள் பலர் தாய்மொழியாம் தமிழைப் பயிலாது பிற மொழிகளில் ஆர்வங்கொண்டு அவற்றையே பயின்று திரியும் போக்கைக் கண்டு, வேதநாயகர் மனம் வெதும்பிப் பேசுகின்றார்; 'பிரஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகளைப் பயின்று விட்டுத் தாய்மொழியாகிய தமிழைப் பயிலாதவர்கள், மாதா வயிறெரிய மகேசுவர பூசை செய்பவர்க்கு ஒப்பாவர்' என்கிறார்; இன்னும் ஒருபடி மேலே சென்று, அவர்களை நாடுகடத்த வேண்டுமென்றுகூடக் கடிந்துரைக்கின்றார்.

மொழிப்பற்றின் காரணமாக வேதநாயகர் சிறந்த தமிழ்த் தொண்டுகள் பல புரிந்துள்ளார்; உரைநடை நூல்கள் எழுதியும், செய்யுள் நூல்கள் எழுதியும், இசைப்பாடல்கள் எழுதியும், சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்தும், இவ்வாறு பல வகையில் தொண்டுகள் ஆற்றியுள்ளார்.

தமிழ்மொழியில் உரைநடை நூல்களை முதன் முதலில் எழுதிய பெருமை இவரையே சாரும். அதனால் இவர் 'உரைநடையின் தந்தை' என்னும் பாராட்டைப் பெற்றார். இவர் உரைநடையின் தந்தைமட்டும் அல்லர்; புனைகதையின் தந்தையும் ஆவார். முதன்முதலாகப் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் புனைகதையைத் தமிழில் எழுதி

வெளியிட்டார். இது நகைச்சுவை நிறைந்தது; உயர்ந்த கருத்துகளைக் கொண்டது; இலக்கிய வரிசையில் வைத்து எண்ணத்தக்கது. இவருடைய புனைகதைகளைத் 'தாய் படிக்க மகன் கேட்கலாம்; அண்ணன் படிக்கத் தங்கை கேட்கலாம்; தந்தை படிக்கத் தாய் கேட்கலாம்; குடும்பமே கலந்து படிக்கத்தக்க அவ்வளவு சிறப்புடையது' என்று பன்மொழிப் புலவர் புகழ்வர். இவர் 'சுகுணசுந்தரி சரித்திரம்' என்னும் புனைகதை நூலும் எழுதியுள்ளார்.

வேதநாயகர், 'நீதி நூல்,' 'சித்தாந்த சங்கிரகம்,' 'பெண்மதி மாலை,' 'திருவருள் அந்தாதி' முதலிய சிறந்த செய்யுள் நூல்களும், 'சர்வ சமய சமரசக் கீர்த்தனை' என்னும் இசைப்பாடல் நூலும் எழுதி வெளியிட்டார்.

அக் காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியிருந்தமையால் சட்டங்கள் ஆங்கில மொழியில் இருந்தன. அதனால் தமிழ் மக்கள் படும் இன்னல்களையெல்லாம் நீதிபதியாக இருந்த வேதநாயகர் நன்கு உணர்ந்திருந்தார். 'ஒரு நீதிமன்றத்தில் கட்சிக்காரர்களும் தமிழராக இருந்து, வழக்குரைஞர்களும் நீதிபதிகளும் தமிழ் பேசக்கூடியவர்களாக இருந்தால், வழக்கு ஏன் தமிழிலேயே நடத்தல்கூடாது?' என்று இவர் அக் காலத்திலேயே உரிமைக் குரல் கொடுத்தார்.

'ஆங்கில ஆட்சிமுறை மாறித் தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி தலையெடுக்க வேண்டும்; அது தழைத்

தோங்க வேண்டும்; அது சார்ந்து, நீதிமன்றங்களில் தமிழ் மொழியிலேயே சட்டதிட்டங்களும் அமைக்கவேண்டும்; வழக்குரைஞர்களும், வாதிப் பிரதிவாதிகளும் தமிழிலேயே எதையும் எடுத்துச் சொல்லவேண்டும். நாட்டில் சுதந்திர ஒளி வீச வேண்டும்' என்று வேதநாயகர் பேசிய பேச்சிலிருந்து இவருடைய உள்ளம் தெள்ளிதின் விளங்குகின்றது.

இத்தகைய எண்ணங்கள் இவருடைய நெஞ்சத்தில் நிலேத்திருந்தமையாலும், நீதிபதியாகப் பணியாற்றிவந்தமையாலும் சட்டங்களே இவர் மொழிபெயர்க்க முயன்றார். நேரங் கிடைத்த போதெல்லாம் உயர்நீதி மன்றத்தின் சட்டங்களேயும் தீர்ப்புகளேயும் இவர் சிறிதுசிறிதாக மொழி பெயர்த்துவந்தார். கி.பி. 1805ஆம் ஆண்டு முதல் கி.பி. 1861ஆம் ஆண்டு முடிய உள்ள சட்டங்களே இவர் தமிழில் மொழிபெயர்த்தார்; அனேத்தையும் ஒன்றுசேர்த்து அச்சிட்டு வெளியிட்டார்.

இப் பெருமகனுர் செய்த மொழித்தொண்டின் பயனுகத்தான், இன்று தமிழார்வம் பூத்துக் குலுங்கி மலர்ந்து மணம் வீசிவருகின்றது.

## உ. இசைக்குயில்

தமிழ்நாட்டில், தமிழ்மக்கள் முன்னிலேயில் தமிழர்கள் பாடிவந்த இசையரங்குகளில், தமிழை ஒதுக்கிவிட்டுப் பிறமொழிப் பாடல்களேயே அக் காலத்தில் பாடிவந்தார்கள் அத்தகைய நிலேயில் தமிழிசைக்கு முதன்மை தரவேண்டும் என்ற

எண்ணினர் வேதநாயகர். இவர் குறிப்பிட்ட ஒரு சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், சமயச் சார்பில்லாமல், பொதுவான கருத்துகளைப் புகுத்திப் புதுமையான முறையில் பாடல்களை இயற்றித் தமிழிசையைப் பரப்பினர். தமிழிசையின் மறு மலர்ச்சிக்குப் புத்துயிர் அளித்த பெருமை இவரைச் சாரும்.

இசைப்பாடல் இயற்றக் காரணம்

வேதநாயகர், திரிசிரபுரத்திலிருந்த மாவட்ட நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணி யாற்றிக் கொண்டிருந்தபொழுது, இசை நிகழ்ச்சி களுக்குத் தவருது சென்று கேட்டு மகிழ்வார். அரங்குகளில் பாடிய இசைவாணர் பிறமொழிப் பாடல்களையே பாடிவந்தனர். தமிழ்நாட்டில் விசய நகர மன்னர்கள் ஆட்சியும், நாயக்க மன்னர்கள் ஆட்சியும் பரவியிருந்தமையால், தெலுங்குமொழி ஆதிக்கம் பெற்றிருந்தது. அதனல் பாடல் இயற்றும் ஆசிரியர்கள் தெலுங்குப் பாடல்களை இயற்றத் தொடங்கினர்கள். இசைவாணரும் அவற்றையே மேடைகளில்,பாடி வரலாயினர். இவ்வாறு தென் மாவட்டங்களில் நடைபெற்ற எல்லா இசையரங்கு களிலும் பிறமொழிப் பாடல்களே முழங்கி வந்தன.

இசையரங்குகளில் பிறமொழிப் பாடல் களையே கேட்டுவந்த வேதநாயகரின் மனம் மிக வருந்தியது. தமிழ்நாட்டில் தமிழ்ப்பாடல்களைக் கேட்க முடியவில்லையே என்று இவர் எண்ணி யெண்ணிப் பலநாள் நொந்து தவித்தார். மேலும்,

கீர்த்தனை அமைப்பில் பாடல்கள் இயற்றத் தமிழ் மொழி இடந்தாராது என்னும் தவறான கருத்தும் அப்பொழுது நாட்டில் உலவியது. இக் கருத்தைக் கேள்விப்பட்ட வேதநாயகர், 'தமிழுக்கு இப்படி ஒரு பழி வரலாமா' எனத் துடித்தார்; அப் பழியை நீக்க வேண்டும் என்று சிந்தித்தார்; தாமே கீர்த்தனை அமைப்புகளில் தமிழ்ப்பாடல்கள் இயற்றுவதென முடிவு செய்தார்.

வேதநாயகர்க்கு இயல்பிலேயே தமிழ்ப் புலமை நிறைந்திருந்தது. ஆயினும், இசைப்புலமையும் பாடுந்திறனும் இருந்தால், சிறந்த முறையில் இசைப் பாட்டுகளை இயற்றலாம் என்று இவர் எண்ணினார். அதனால் இசைப்பாட்டுப் பாடும் இரண்டு இசை வாணர்களுடன் தொடர்புகொண்டார்; அவர் களிடம் மாணவராக இருந்து, பெரிதும் முயன்று இசை பயின்றார்; 'முயற்சி திருவினையாக்கும்' என்னும் முதுமொழிக்கேற்ப நன்கு பாடும் ஆற்றலையும் பெற்றார்.

தமிழ்ப்புலமை, இசையறிவு, பாடுந்திறமை ஆகிய இம்மூன்றும் வாய்க்கப் பெற்ற வேதநாயகர் தமிழில் இசைப்பாட்டுகள் இயற்றினார்; இசை யரங்குகளில் அவற்றைப் பாடுமாறு செய்தார். கீர்த்தனை முறையில் தமிழில் பாடமுடியாதென்ற கருத்தை முறியடித்துக் காட்டினார்; தமிழை மறந்து, பிறமொழியோசையில் மயங்கிக்கிடந்த தமிழகத்தில் ஒரு புரட்சியையே உண்டாக்கி விட்டார் என்று சொல்லலாம்.

எந்தப் புதுமைக்கும் முதலில் எதிர்ப்பு ஏற்படுவது இயல்பே. இவருடைய தமிழிசை மறுமலர்ச்சிக்கும் எதிர்ப்புத் தோன்றியது; இகழ்ந்து கூறியவரும் உண்டு; எள்ளி நகையாடியவரும் உண்டு; வெறுப்புக் காட்டியவர்களுக்கும் குறைவில்லை. ஆயினும் வேதநாயகர் இவற்றிற்கு அஞ்சினார் அல்லர்; மேலும்மேலும் புதிய பாடல்களை எழுதி அரங்கேற்றினார். விடாது முயன்றமையால், தமிழிசைப்பாட்டுகள் எங்கும் பரவத் தொடங்கின.

இசைவாணர் மேடைதோறும் தமிழிசைப் பாடல்களை முழங்கினர். வானொலி நிலையங்களில் இன்று நாடோறும் நாம் தமிழிசை கேட்டு மகிழ்கின்றோம். ஆயினும், இவருடைய பாடல்களை இன்னும் விரிவாகப் பரப்ப முயலுதல் வேண்டும். இசைவாணர் அவற்றை மறந்து விட்டனரோ என்னும் ஐயம் நமக்கு உண்டாகின்றது. வேதநாயகர் இயற்றிய இசைப்பாடல்களை நன்முறையில் அச்சிட்டுப் பரப்பவேண்டும். வளர்ந்துவரும் இளைஞர் சமுதாயத்துக்கு வேதநாயகரை நன்கு அறிமுகஞ்செய்யவேண்டும். இவரை அறிமுகஞ் செய்துவைத்தால் இளைஞருடைய உள்ளங்களிலே நல்ல கருத்துகள் பல பதியும். அதனால் அவர்கள் நல்ல குடிமக்களாக வளர்ந்து வருவார்கள். நற்குடிமக்களாக வளர்ந்த அவர்களால் நாடு நலம் பெறும்.

**சர்வ சமயக் கீர்த்தனைகள்**

இவருடைய பாடல்கள் இலக்கண வரம்பு கடவாதன. இவற்றில் சொல்லழகு மிளிரும்;

ஓசையின்பம் உயர்ந்திருக்கும்; எதுகை மோனை எக்காளமிடும். எளிய சொற்கள், உயரிய கருத்துகள், நினைந்துநினைந்து மகிழும் உவமைகள், நகைச்சுவை, பத்திச்சுவை முதலியவை இவர் பாடல்களிலே உண்டு. கருநாடக சங்கீத வழிகளில் எவ்வளவு இராகங்கள் உண்டோ அவ்வளவுக்கும் இவர் பாடல்கள் இயற்றியிருக்கின்றார்.

வேதநாயகம் பிள்ளை பாடிய பாடல்கள், 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்' என்னும் பெயர்தாங்கி, நூல் வடிவில் வெளிவந்தன. இவர் பாடல்களில் இறைவனைக் குறிக்குஞ் சொற்களெல்லாம் பொதுவாகவே அமைந்திருக்கும்; உள்ளத்தைத் திருத்தும் உயர்ந்த கருத்துகள் மிளிரும்; நகைச்சுவை பலவிடங்களிலே தோன்றும். இவ்வாறு தமிழிசைக்குப் புத்துயிரும் மறுமலர்ச்சியும் உண்டாக்கும் குறிக்கோளுடன் பாடிப்பாடிப் பறந்து வந்த இசைக் குயில் வேதநாயகர் கி. பி. 1889ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் நாள் இவ்வுலகைவிட்டே மறைந்தார். இசைக்குயில் மறைந்து விட்டாலும் அக் குயிலின் குரல் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது.

---

# 2. மணிக்குயில் தேசிகவிநாயகம்

(கி. பி. 1876 — 1954)

ஒரு நாடு நல்ல நாடு என்று சொல்லவேண்டுமானால், அந் நாட்டு மக்கள் நல்லவர்களாக விளங்க வேண்டும். மலை வளம், ஆற்று வளம் முதலிய வளங்களைக்கொண்டோ, விளைநிலம், சோலைநிலம் இவற்றின் செழிப்பைக்கொண்டோ மட்டும் ஒரு நாடு சிறப்புப் பெறுவதில்லை. மனவளங்கொண்ட மக்களைக்கொண்டுதான் அந்த நாடு, புகழுக்குரிய நாடென்று போற்றப்படும். மக்கள் பண்பாடு மிக்கவர்களாக வாழவேண்டுமானால், இளமைப் பருவத்திலேயே அவர்களைப் பண்படுத்தி வர வேண்டும்.

இளஞ்சிறுர்களைப் போற்றி வளர்க்க மறந்த எந்த நாடும் ஏற்றம் பெறுவதில்லை. இவ்வுண்மையை நன்குணர்ந்து, இளஞ்சிறுர் நெஞ்சங்களைப் பண்படுத்தி, மக்கட் பண்பை வளர்க்க வேண்டும் என்னும் கொள்கைக்காகவே வாழ்ந்தவர் மிகச் சிலரே. இத்தகைய சான்றேர்களுள் ஒருவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. கவிஞர்கள் தங்கள் நூல்களைப் புகழ்பெற்ற பெரியவர்களுக்கே காணிக்கையாக்குவது வழக்கம். ஆனல், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தம் கவிதைத் தொகுப்பாகிய 'மலரும் மாலையும்' என்னும் நூலைச்

சிறுவர் சிறுமியர்க்கே காணிக்கையாக்கித் தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றூர்.

செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்தநூல் உரியதாய் என்றும் வாழ்கவே'

என்று இவர் தமது நூலில் எழுதியிருப்பதால், நாட்டின் இளம்பாலாரிடத்தே கவிமணி எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது நன்கு புலனுகும். இளந்தலையார் நலத்திலே அக்கறைகொண்டு விளங்கிய இப் பெருமகனுரைக் குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாவா?

## அ. இளமைப் பருவம்

**பிறப்பும் கல்வியும்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரத்தை அடுத்துத் தேரூர் என்னும் சிற்றூர் உளது. அவ் வூரில் வேளாண் மரபினர் சீருஞ்சிறப்புமாக வழிவழி வாழ்ந்து வருகின்றனர். அம் மரபில் சிவதாணுப்பிள்ளை என்ற பெருமகனுர் ஒருவர் பிறந்து, சிறந்து விளங்கினுர். இவர் ஆங்கிலங் கற்றவர்; தமிழார்வம் மிக்கவர்; உப்பளத்தில் அரசுப் பணியாளராகப் பொறுப்பேற்று வாழ்ந்து வந்தார். இவருக்கு ஆதிலட்சுமி அம்மையார் என்பவர் வாழ்க்கைத் துணைவியாராக விளங்கினுர். இவர்கள் செய்த நல்வினைப் பயனுகக் கி. பி. 1876ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27ஆம் நாள் (தாது வருடம் ஆடி மாதம் 14ஆம் நாள்) கவிமணி தேசிகவிநாயகம் இவர்களுக்கு நன்மகனுகத் தோன்றினுர்.

சிவதாணுப் பிள்ளையும் ஆதிலட்சுமி அம்மையாரும் தங்களுடைய ஒரே ஆண்மகவான இவரைக் கண்ணெனப் போற்றி வளர்த்தனர். குழந்தைப் பருவங் கடந்து, கல்விப் பருவம் எய்திய தேசிக விநாயகம், தேரூரில் உள்ள தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்பெற்றார். அப்போது தமிழ்நிலமாகிய நாஞ்சில் நாடு திருவாங்கூர் ஆட்சிக்குள் இருந்தமையால், இவர் மலையாள மொழியையே கற்க வேண்டியவரானார். அம் மொழியைக் கற்றுவந்தாலும், தமிழ்மொழியில் ஒரு தனியார்வம், இவர் நெஞ்சத்தில் ஊறிக்கொண்டேயிருந்தது. இடையறாது அந்த ஆர்வம் வளர்ந்துகொண்டே வந்தமையால், அது நிறைவேறுங் காலமும் வந்து சேர்ந்தது.

'எண்ணிய எண்ணியாங் கெய்துப, எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, எண்ணிய வண்ணம் இவர் தமிழ்ப் புலமையும் பெற்றார்.

தேரூரின் வட எல்லையில் உள்ள பெரிய ஏரியின் நடுவே 'வாணன்திட்டு' என்னும் பெயருடன் ஒரு தீவுத்திடல் இருக்கிறது. அத் திட்டிலிருக்கும் திருவாவடுதுறை மடத்தில் சாந்தலிங்கத் தம்பிரான் என்னும் பெரியார் தலைவராக இருந்தார். அவர் சமயத் துறையில் எவ்வளவு பேரறிவு படைத்திருந்தாரோ அந்த அளவிற்கு இலக்கிய இலக்கணங்களிலும் திறமை படைத்தவராக விளங்கினார். அவரிடம் கவிமணியும் வேறு சிலரும் தமிழ் கற்கத் தொடங்கினர். தொடக்கப் பள்ளியில் படித்துக்

கொண்டிருந்தபொழுதே தம்பிரானிடம் கவிமணி தமிழையும் நன்கு கற்றுவந்தார்.

தொடக்கப் பள்ளியில் படிப்பு முடிந்ததும் இவர் கோட்டாற்று ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து படித்துவரலானார். இவர் தம் பத்தாம் வயதில் தந்தையாரை இழந்துவிட்டார்; அதனால் தாயாரின் மேற்பார்வையில் வளர்ந்துவந்தார். ஆங்கிலப் பள்ளியில் இவர் பயின்று வந்தபோதும், தம்பிரானிடம் சென்று தமிழ் கற்கத் தவறியதில்லை. அதனால், இவர் இலக்கியப் பயிற்சியும் இலக்கணப் பயிற்சியும் பெற்றுத் திகழ்ந்தார். பாடல்கள். வரலாற்றுக் குறிப்புகள் என்றால் இவர்க்குத் தனி விருப்பம் அப்பொழுதே இருந்துவந்தது. இவர் ஐந்தாண்டுகள் தமிழ் கற்றுச் சிறந்த புலமையும் பெற்றார். இளமைப் பருவத்திலேயே பாடல்கள் இயற்றும் ஆற்றலும் இவரிடம் அமைந்திருந்தது. சாந்தலிங்கத் தம்பிரானுக்குப் பிறகு, அம் மடத்தின் தலைவராகச் சங்கரலிங்கத் தம்பிரான் என்பவர் வந்துசேர்ந்தார். அவரிடத்தும் கவிமணி தொடர்பு கொண்டிருந்தார். புதிய தம்பிரான் கவிமணியின் பாடல்களைக் கேட்கும்போதெல்லாம் மகிழ்ச்சி அடைவார்; 'நீ எதிர்காலத்தில் பெருமையுடன் விளங்குவாய்' என்று வாழ்த்துக் கூறுவார்.

## கவிதைப் பயிற்சி

ஒரு நாள் கவிமணியும் அவருடன் பயின்றவர்களும் மடத்துக்கு வந்தார்கள். அப்பொழுது தம்பிரானுக்கு அருகில் அப்பம், வடை முதலிய தின்

பண்டங்கள் நிறைந்த தட்டொன்று இருந்தது. தம்பிரான் அவற்றை அவர்களுக்குக் கொடுக்க எண்ணினர்; ஆயினும் ஒப்பித்தல் போட்டி வைத்து, அதில் வெற்றி பெறுபவர்க்குக் கொடுக்கக் கருதினர்; சிறுவர்களை அழைத்தார்; 'நான் தேவாரப் பாடல் ஒன்றைப் பாடுவேன். பிறகு புத்தகத்தைப் பார்த்து, உங்களுள் ஒருவர் அதைப் படிக்கவேண்டும். அதன் பின்னர், மீண்டும் ஒரு முறை நான் பாடுவேன். இவ்வாறு மூன்று முறை கேட்ட அந்தப் பாடலை யார் பிழையில்லாமல் சொல்கின்றீர்களோ அவர்களுக்கு அப்பமோ, வடையோ கொடுக்கப்படும்' என்று ஒரு போட்டி வைத்தார். போட்டியில் கவிமணியே வெற்றிமேல் வெற்றி பெற்ருர். தம்பிரானுக்குப் பக்கத்திலிருந்த அப்பம் வடையெல்லாம் கவிமணிக்கு முன்னல் வந்துசேர்ந்தன. உடனிருந்த மாணவர்களுக்குத் தோல்வியைப்பற்றி அவ்வளவு கவலையில்லையென்ருலும், தின்பண்டங்கள் அவ்வளவும் போயினவே என்ற ஏக்கம் மிகுதியாக இருந்தது. இரக்கமும் அன்பும் கொண்ட கவிமணி அவற்றை எல்லார்க்கும் பகிர்ந்து கொடுத்தார். இந்த நிகழ்ச்சியினல் கவிமணியின் நினைவாற்றல் புலப்படுகிறது.

ஆங்கிலப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பொழுது, கவிமணி ஓர் அழகான பாடலை இயற்றினர். அது சிறந்த பாடல் என்று இவர் உணர்ந்தார்; ஆயினும், மற்றவர்கள் அதனை எப்படிக் கருதுகின்ருர்கள் என்று அறிய ஆசைப்பட்டார்; அதனல், அந்தப் பாடலை ஒரு தாளில் எழுதித்

தமிழாசிரியர் இருக்கைக்குப் பக்கத்தில் யாரும் அறியாவண்ணம் வைத்துவிட்டார். அங்கு வந்த தமிழாசிரியர் அதனைக் கண்டார்; அதை எடுத்துப் படித்துப்பார்த்தார்; பாடல் மிகச் சிறந்த முறையில் அமைந்திருந்ததைக் கண்டு மிகுதியாகப் பாராட்டி, 'யாருடைய பாடலென்று அறிய முடியவில்லையென்றாலும், சொல்லழகும் பொருளழகும் நிறைந்திருக்கிறது' என்று வியந்து கூறினார். தம்முடைய பாடல் தம்முடைய ஆசிரியராலேயே பாராட்டப் பெறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த கவிமணி, மனத்துக்குள்ளேயே மகிழ்ந்துகொண்டார்.

அவ்வப்பொழுது கவிமணி, வேடிக்கையாகத் தம் கவித்திறன் வெளிப்படுமாறு, பாடல்களைத் தனித்தனியாகப் பாடிவந்தார். ஒருசமயம் தம்பிரான் வேண்டிக்கொண்டதற்கிணங்கத் தேரூர்ப் பெருங்குளத்தின் நடுவே கோவில்கொண்டிருக்கும் அழகம்மைமீது பத்து விருத்தப் பாக்கள் பாடினார்; 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' என்று அந்நூலுக்குப் பெயர் வைத்தார். அப் பாடல்களில் பத்திச் சுவை, இனிமை, கனிவு, கற்பனை யாவும் விளங்கும். பின்னர் இவர் தம்முடைய குலதெய்வமாகிய அழகிய மணவாள விநாயகர்மீதும், சுசீந்திரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன்மீதும் பாடல்கள் பல பாடினார்.

ஆராய்ச்சி மனப்பான்மை

கவிமணிக்கு இளமையிலேயே, எதையும் ஆராய்ந்துபார்க்கின்ற ஆர்வம் இயல்பாக அமைந்

திருந்தது. இந்த ஆர்வம் தென்னிந்திய வரலாற்று ஆராய்ச்சியிலும் கல்வெட்டு ஆராய்ச்சியிலும் இவரை ஈடுபடுத்தியது. அரசுக் கல்வெட்டு ஆராய்ச்சித் துறையில் கணேசப் பிள்ளை என்பவர் பணியாற்றி வந்தார். அவர் திருவனந்தபுரத்தில் தங்கியிருந்தாலும், அடிக்கடி தேரூருக்கு வருவார். அவருடன் கவிமணி தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. அவருடைய தொடர்பு கவிமணியின் ஆராய்ச்சி ஆர்வத்தை வளரச் செய்தது.

சுங்கான்கடை என்னும் இடத்துக்கு அருகில் பழங்கோட்டை ஒன்று இருந்தது என்று ஆராய்ந்து, அதற்குரிய சான்றுகளும் தொகுத்து எழுதிவைத் திருந்தார் கணேசப் பிள்ளை. அவர் எழுதிவைத் திருந்த அந்த ஆராய்ச்சிக் குறிப்புகளை, அவர் அறியாவண்ணம் காணும் வாய்ப்பைக் கவிமணி பெற்றார். அக் கருத்தை மறுத்துத் தகுந்த சான்று களும் காட்டி, ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றினை எழுதி, 'திருவாங்கூர் டைம்ஸ்' என்னும் ஆங்கில இதழில் இவர் வெளியிட்டார். இக் கட்டுரையைப் படித்துப் பார்த்த கணேசப் பிள்ளை திகைத்துப் போனார்.

வெளியிடப்பட்டுள்ள தென்னிந்தியக் கல் வெட்டுகள் அனைத்தையுமே கவிமணி கற்றுத் தெளிந்துவைத்திருந்தார்; இவற்றைப் படித்து, நிறைந்த செய்திகளைத் தொகுத்துவைத்திருந்தார்; அதன் பயனாகக் 'காந்தளூர்ச்சாலை' என்னும்

ஆராய்ச்சி நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். அந் நூலில் இவருடைய ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சித் திறனும் வெளிப்பட்டன. இவர் தொகுத்து வைத்திருந்த மொழியாராய்ச்சிக் குறிப்புகளும், இலக்கண ஆராய்ச்சிக் குறிப்புகளும், கல்வெட்டு ஆராய்ச்சிக் குறிப்புகளும் பலருக்குப் பெரிதும் பயன்பட்டன. தவருன ஆராய்ச்சிகள் வெளிவந்தால், அவற்றிற்குத் தகுந்த சான்று காட்டி இவர் மறுப்புரைகள் எழுதுவதுண்டு; நூற்பதிப்புகளில் பிழைகள் காணப்படும்பொழுது, அவற்றைத் திருத்திக்கொள்ளுமாறு காரணங்காட்டிப் பதிப்பாசிரியர்க்கு எழுதுவார்.

## ஆ. ஆசிரியப் பணி

### திருமணம்

கவிமணி ஆங்கிலப் பள்ளியில் பயிலும் பொழுதே கவிதை எழுதுதல், ஆராய்ச்சிக் கட்டுரை வரைதல் போன்ற துறைகளில் ஆர்வங் காட்டியபோதிலும், படிப்பில் கருத்துடனேயே இருந்துவந்தார்; உயர் நிலைப் படிப்பை முறையாகப் படித்து முடித்தார். பின்னர், இவர் கல்லூரியில் சேர்ந்தார்; கல்லூரியில் ஓராண்டே படித்தார். குடும்பப் பொறுப்பு மிகுதியாகவே படிப்பை நிறுத்திவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் திருமணம் செய்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவர்தம் இருபத்தைந்தாவது வயதில் திருமணம் செய்து கொண்டார். இவர்க்கு வாழ்க்கைத்துணையாக

வாய்த்தவர் உமையம்மை என்னும் பெயருடையவர் ஆவார். இவ்வம்மையார் நாகர்கோவிலை அடுத்துள்ள புத்தேரியில் பிறந்தவர்; நற்குண நற்செயல்கள் நிரம்பப் பெற்றவர்.

இல்லற வாழ்க்கை இனிதே நடைபெற்று வரும் போது, ஏதேனும் ஒரு பணியில் அமரவேண்டும் என்ற எண்ணம் இவருக்கு உண்டாயிற்று. அரசுப் பணியாக இருந்தால் நல்லது என்று இவர் எண்ணினார்; எந்த வேலையில் சேர்வது என்று சிந்தித்தார். கவிமணி அடக்கமுடையவர்; பொறுமை மிகுந்தவர்; கருணையுள்ளங் கொண்டவர்; ஆராயும் பண்புடையவர்; தம் எண்ணங்களைக் கவிதையாகவும் கட்டுரையாகவும் பிறருக்கு எடுத்துரைக்கும் இயல்புடையவர்; சொல் வன்மையும் உடையவர். பொதுவாக நல்லாசிரியர் ஒருவர்க்கு வேண்டும் பண்புகள் அனைத்தும் இவரிடம் குடிகொண்டிருந்தன. அதனால் இவர் ஆசிரியப் பணியில் அமர்வதுதான் சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார். ஆசிரியத் தொழில் மிக மிகத் தூய்மை வாய்ந்தது. இவர் இயல்புக்கும் அதுவே ஏற்ற தொழிலாயிருந்தது.

## தொடக்கப் பள்ளி ஆசிரியர்

ஆசிரியப் பணியை மேற்கொள்வதென்னும் முடிவுக்கு வந்த கவிமணி முதன்முதலில் கோட்டாற்றிலுள்ள தொடக்கப் பள்ளியொன்றில் ஆசிரியராய் அமர்ந்தார். ஆசிரியர்க்குரிய நல்லியல்புகள் அத்துணையும் வாய்க்கப்பெற்றிருந்தமையால், அத் தொழிலில் இவர் சிறந்து விளங்கினார்.

தொடக்கத்திலே இவர் இளஞ்சிறுர்க்கு ஆசிரியராக அமர்ந்த காரணத்தால், அவர்களுடைய உளப் பாங்கை நன்கு அறிந்துகொண்டார். அதனுல் தான் குழந்தைகளுக்காகக் கவிதை எழுதுவதில் இவர் ஒப்பற்று விளங்கினுர். இவர் கற்பிக்கும் திறனும், குழந்தைகளிடம் காட்டும் அன்பும், எளிமையும், இனிமையும் மாணவர்களைக் கவர்ந் தன; நல்லாசிரியர் என்னும் புகழும் பரவியது.

பதவி உயர்வு

குழந்தைகளின் மனப் பாங்கறிந்து கற்பித்து வரும் கவிமணியின் சிறப்பு, நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. இதனையறிந்த அரசினர், இவரைக் கோட்டாற்றிலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஓர் ஆசிரியராக நியமித்தனர். இத் தொழிலுக்குப் பெரிதும் தகுதியுடையவராக இருந்தமையால் அங்கும் இவர் சிறந்து விளங்கினுர்; அதன் பின்னர், திருவனந்தபுரத்திலுள்ள மகளிர்க்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மாற்றம் பெற்றுர். அங்கே பணியாற்றி வந்தபொழுது, இவருடைய தமிழ்ப் புலமையறிந்த அரசினர், திருவனந்தபுரம் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் இவரைத் தமிழாசிரியராக அமர்த்தினர். சில ஆண்டுகளுக்குப் பின், இவர் மகளிர் கல்லூரிக்குத் தமிழ் விரிவுரை யாளராக மாற்றப்பட்டார். ஓய்வு பெறும் வரை இப்பதவியிலேயே தொடர்ந்து பணியாற்றிவந்தார்.

கல்லூரியில் பணியாற்றி வந்தபொழுது, கல்லூரித் தலைவியாக இருந்த அம்மையார்,

இவரிடம் பெருமதிப்பு வைத்திருந்தார்; தம் உடன் பிறந்தவரைப்போலக் கருதிக் கல்லூரித் தொடர்புள்ள எச் செயலையும், இவருடன் கலந்து பேசிச் செய்துவந்தார்; பல பொறுப்புகளையும் இவரிடம் ஒப்படைத்திருந்தார்.

இவர் மற்ற ஆசிரியர்களின் அன்பையும் நன் மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்தார். மாணவி களுக்கு இவர் கற்பித்த முறை தனித்தன்மை வாய்ந்தது; பாடங்களைத் திணிக்காமல், மாணவிய ரிடம் அமைந்திருக்கும் அறிவொளியைத் துலக்க முறச் செய்யும் ஒரு தூண்டுகோலாகவே இவர் விளங்கினார். அன்புடன் எதனையும் இவர் உணர்த்தி வந்தமையால், மாணவியரும் இவரைத் தந்தை போல் எண்ணி இவரிடம் பெருமதிப்புடன் நடந்து வந்தனர். இவர் ஐம்பத்து மூன்று வயதுவரை பணியாற்றி வந்தார்.

கவிமணி தன்மான உணர்வும் தன்னம்பிக்கை யும் உடையவராக வாழ்ந்து வந்தார்; தம் பதவி உயர்வுக்காகவோ வேறு காரணங்களுக் காகவோ எவரையும் கெஞ்சி நிற்கமாட்டார். அடக்கமும் பணிவும் உடையவராக இருந்தாலும் இவர் தன்மதிப்பு மிக்கவராகவே வாழ்ந்தார்; பெரு மிதத்துடனேயே இறுதிவரை திகழ்ந்தார். உயர் நிலைப் பள்ளியிலிருந்து கல்லூரிக்கு வரவேண்டு மென்று இவர் விரும்பவில்லை. இவருடைய தமிழ்ப் புலமையை அறிந்துகொண்ட கல்லூரித் தலைவியின் முயற்சியினாலேயே இவர் கல்லூரிக்கு வந்தார்.

இவரைப் பேராசிரியராக்கக் கல்லூரித் தலைவி முயன்று கொண்டிருந்தபோது, கல்வித்துறைத் தலைவர், கவிமணியின் தகுதியைக் காட்டும் சான்றிதழ் ஒன்று தேவை என்றார். இதனையறிந்த கவிமணி, 'என் தகுதியைக் காட்டச் சான்றிதழுக்காக எவரிடமும் சென்று நிற்கவும் வேண்டா; எனக்குப் பதவி உயர்வும் வேண்டா' என்று கூறிவிட்டார். இவருடைய இயல்பையும் திறமையையும் நன்கு தெரிந்திருந்த கல்லூரித் தலைவி, தாமே கல்வித் துறைத் தலைவரைக் கண்டு பரிந்துரை செய்து, அவ் வேலை கிடைக்குமாறு செய்தார். எனினும், அப் பதவியை ஏற்கக் கவிமணி ஒருப்பட்டிலர்; ஓய்வுபெற மேலும் இரண்டாண்டுகள் இருந்தும், முன்பாகத் தாமே விலகிக்கொண்டார்.

## இ. கவிமணியின் நூல்கள்

கவிமணி தமிழ்நாட்டிற்குப் படைத்துக் கொடுத்த நூல்களை மூன்று வகையாகக் கொள்ளலாம். ஒன்று கவிதை நூல்கள்; மற்றொன்று இசைப் பாடல்கள்; மூன்றாவது உரைநடை நூல்கள். 'மலரும் மாலையும்,' 'ஆசிய ஜோதி,' 'உமார் கயாம் பாடல்கள்,' 'நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம்' என்பன கவிதை நூல்கள். 'தேவியின் கீர்த்தனங்கள்' இசைப் பாடல்களால் ஆன நூல். 'கவிமணியின் உரைமணிகள்,' 'காந்தளூர்ச்சாலை' என்பன உரைநடை நூல்கள். இவற்றுள் 'காந்தளூர்ச்சாலை' வரலாற்று அடிப்படையில் எழுந்த

ஆராய்ச்சி நூல். இஃது ஆங்கிலத்தில் அமைந்தது; இதுவேபோன்று இவர் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியிட்ட ஆங்கிலக் கட்டுரைகள் பல இன்னும் நூல் வடிவம் பெறவில்லை.

கவிதை நூல்கள்

**மலரும் மாலையும்** என்பது கவிமணி பல்வேறு காலங்களில் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல். பத்திப் பாமலர்களை முதலிலும் கதம்பப் பாமலர்களை இறுதியிலும் கொண்டு இலக்கியமணம் கமழ்வது இம் மாலை. வெண்ணிலா, கடல், மலர்கள் போன்ற இயற்கைப் பொருள்களைப்பற்றிப் பாடிய பாடல்கள் இந் நூலில் இடம் பெற்றுள்ளன. பசு, பொம்மைக் கலியாணம், கடிகாரம், கிளி, நாய், கோழி முதலிய தலைப்புகளில் குழந்தைகளுக்காகவே பாடப்பெற்ற பாடல்களும் இதில் உண்டு. சமூகக் கொடுமைகளை அகற்றுவதற்காகப் பாடிய பாடல்களும் தத்துவக் கருத்துகள் அடங்கிய பாடல்களும் நம் அறிவுக்கு விருந்தாம். தமிழ்ப்பண்பாட்டின் நறுமணத்தை இம்மாலையில் நாம் நன்கு நுகரலாம்.

**ஆசிய ஜோதி** என்னும் நூல், ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்துத் தமிழில் எழுதப் பெற்றது. இதனைப் படிப்பார்க்கு மொழிபெயர்ப்பாகவே தோன்றாது. மூல நூல் படிப்பதுபோலவே உணர்வு தோன்றும். இவருடைய மொழிபெயர்ப்புப் பாடல்கள் எல்லாமே இவ்வாறுதான் அமைந்திருக்கின்றன. பொதுவான கருத்துகளை வைத்துக் கொண்டு, தமிழ் மரபுக்கேற்ப இவர் பாடல்களை

இயற்றுவார். மொழிபெயர்ப்பு என்ற நினைவே தோன்றாமல், தமிழ் மூலத்தைப் படிப்பதுபோலவே இருக்குமாறு மொழிபெயர்ப்புப் பாடல் இயற்று கின்ற இவருடைய பேராற்றலைச் சான்றோர் புகழ்ந் துரைக்கின்றனர். இந் நூல் புத்தர் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது; உள்ளத்தை உருக்க வல்லது; கடவுள் பேரால் உயிர்ப்பலி கூடாது என்று கூறுவது.

**உமார் கயாம் பாடல்களும்** மொழிபெயர்ப்பு நூலே. பாரசீகத்தில் பிறந்த கவிஞர் உமார் கயாம்; அவருடைய பாடல்களைப் புதுப் பொலிவுடன் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார் கவி மணி. இப் பாடல்கள் இனிமைவாய்ந்தன; பொருள் மிக்கன. இப் பாடல்களைப் படிப்பவர்க்கு, வேறு உல கத்தில் இருப்பதுபோன்ற ஓர் உணர்வு தோன்றும்.

**நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம்** என்னும் கவிதை நூல் நகைச்சுவை நிரம்பியது. நாஞ்சில் நாட்டில் ஒரு வேடிக்கையான வழக்கம் முன்பு இருந்துவந்தது. ஒருவருடைய சொத்து அவருடைய மக்களுக்கு உரிமையாகாது; அவர்தம் சகோதரி மக்களுக்கே, அஃதாவது மருமக்களுக்கே உரிமை யாகும். இதற்கு 'மருமக்கள் தாயம்' என்பது பெயர். இவ் வழக்கத்தால் பல கேடுகள் நிகழ்ந்தன. இம் முறையைக் கண்டிக்கும் வகையில் நகைச்சுவை பொருந்த இவரால் எழுதப்பெற்ற நூல் இது.

**தேவியின் கீர்த்தனங்கள்** கவிமணி தமிழிசைக்குச் செய்த தொண்டாகும். 'தேசிக' என்பதிலுள்ள

முதலெழுத்தையும் 'விநாயகம்' என்பதிலுள்ள முதலெழுத்தையும் சேர்த்துத் 'தேவி' என்று கொண்டு, 'தேவியின் கீர்த்தனங்கள்' என்னும் பெயர் வைக்கப்பெற்றுள்ளது. பத்திச் சுவை நிறைந்த நூல் இது.

**உரைநடை நூல்கள்**

கவிமணியின் உரைமணிகள் என்பது இவருடைய உரைநடைகளைத் தொகுத்து வெளியிடப்பட்ட நூலாகும். 'காந்தளூர்ச் சாலை' என்பது சிறந்த ஓர் ஆராய்ச்சி நூல்.

**கவிதைப் பண்பு**

இவருடைய பாடல்கள் எளிய சொற்களால் ஆனவை; இனிமை நிறைந்தவை; படித்தாலும் கேட்டாலும் மனத்தை உருக்குபவை. அருஞ்சொற் களைக்கொண்ட பாடல்களையும் இவர் இயற்றி யுள்ளார். எனினும் சிறுவர் சிறுமியரை மனத்தில் வைத்துக்கொண்டு பாடியதாலும், அவர்களுக் காகப் பாடுவதையே குறிக்கோளாகக்கொண்டமை யாலும் எளிய சொற்களைக்கொண்டே இவர் பாடல்களை இயற்றினர். ஆயினும் உயர்ந்த கருத் துகளை அந்தப் பாடல்கள் உணர்த்தும். சிறுவர்க் கான பாடல்களைப் பெரியவர்களும் சொல்லிச் சொல்லி இன்புறுவர். 'ரசிகமணி' என்னும் சிறப் பினைப் பெற்ற டி. கே. சிதம்பரநாத முதலியார், கவிமணியின் பாடலைப் பாடிப்பாடி உருகுவார்; நம்மையும் உருகவைப்பார்.

ஒருசமயம் கவிமணி சிரங்கினுல் பெருந் துன்ப முற்ருர். உடல் முழுவதும் சிரங்கு பரவியது. தொல்லே தாங்க முடியவில்லே. கவிஞர் அல்லற் பட்டாலும் அந்த வேதனே பாட்டாகவே எழுந்தது. துயரத்தையும் நகைச்சுவை பொருந்தவே இவர் வெளியிட்டார். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பதை நன்கு உணர்ந்த கவிமணி, நகைச்சுவை யுடன் வேதனேயை வெளிப்படுத்திய அந்த வெண்பா இதுவே:

'முத்துப் பவழம் முழுவயிரம் மாணிக்கம்
பத்திஒளி வீசு பதக்கமெலாம்—சித்தன்
சிரங்கப்ப ராயன் சிறியேன் எனக்குத்
தரங்கண்டு தந்த தனம்.'

பதக்கமென்று சிரங்குகளேக் குறிப்பிடுகின்ருர். முத்து, பவழம், வயிரம், மாணிக்கம் முதலிய வற்றை வரிசையாகப் பதித்து வைத்த பதக்கமாம். அப் பதக்கம், இவருடைய தரங்கண்டு, சிரங்கப்ப ராயனுல் கொடுக்கப்பட்ட பரிசாம். இதில் எவ் வளவு நகைச்சுவை பொருந்தியுளது!

சிரங்கு தீர இவர் மருந்துண்டார்; உடலில் மருந்துகள் பூசினுர். ஆயினும் சிரங்கு நீங்க வில்லே. அதற்கும் இவர் மற்ருெரு வெண்பாப் பாடினுர்:

'உண்டமருந் தாலும் உடல்முழுவ தும்பூசிக்
கொண்டமருந் தாலும் குணமிலேயே—மண்டு
சிரங்கப்ப ராயா சினமாறிக் கொஞ்சம்
இரங்கப்பா ஏழை எனக்கு.'

இத்தகைய அழகிய வெண்பாக்கள் பல பாடி

யுள்ளார் கவிமணி. இவர் இயற்றிய பாக்களைப் படித்தால் இவரே நம்முடன் பேசுவது போல இருக்கும்.

## ஈ. கவிமணியின் நல்லியல்புகள்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ஒரு சிறந்த கவிஞர்மட்டும் அல்லர்; உயர்ந்த நற்பண்புகளுக்கு உறைவிடமாகவும் திகழ்ந்தவர். அப் பண்புகளை நாமும் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்து கொள்வதுடன் நின்றுவிடாமல், அவற்றில் நம் மனத்தை ஈடுபடுத்தவேண்டும்; முழுவதையும் பின்பற்ற முடியாவிட்டாலும் சிலவற்றையேனும் நாம் கடைப்பிடித்து நடக்கவேண்டும்.

### அன்புள்ளம்

கவிமணி என்னும் பெயரை நினைத்தவுடன், அன்பு, கருணை, எளிமை முதலிய பண்புகள்தாம் நினைவுக்கு வரும். சிறியவர் பெரியவர், உறவினர் அயலார் என்னும் வேறுபாடில்லாமல் எல்லாரிடத்தும் இவர் அன்பு செலுத்தும் இயல்புடையவர். இவர் குழந்தைகளுக்காகப் பாடல்கள் இயற்றியதாலும், பெரும்பாலும் பெண்கள் பள்ளியிலும் பெண்கள் கல்லூரியிலும் ஆசிரியப் பணி புரிந்தமையாலும் இவரிடம் தாயன்பு மிகுந்திருந்தது. இந்த அன்பின் காரணமாகவே பெரியோர் பலருடைய நட்பு இவருக்கு ஏற்பட்டது. ரசிகமணி' டி. கே. சிதம்பரநாதர், பேராசிரியர்

வையாபுரியார், செட்டிநாட்டரசர் அண்ணாமலையார், தமிழறிஞர் சொ. முருகப்பனார் போன்ற பெருமக்கள் இவர்பால் நன்மதிப்பும் பேரன்பும் கொண்ட நண்பர்களாயினர். தமிழர் நெஞ்சமெல்லாம் இவர் தங்கி மிளிரக் காரணம் இவருடைய அன்புள்ளமே.

அருள் நெஞ்சம்

உற்றார் உறவினர் முதலியவர்களிடம் காட்டப் பெறும் ஆர்வமே அன்பு எனப்படும். உயர்திணை, அஃறிணை என்னும் வேறுபாடு கருதாது, எல்லா உயிர்களிடத்தும் காட்டும் இரக்கவுணர்வே அருள் எனப்படும். இவ்வருள் வடிவமாகவே கவிமணியவர்கள் காட்சியளித்தார்கள். அன்பின் முதிர்ச்சி தானே அருள்! அன்புள்ளம் படைத்த கவிமணி, அன்பு முதிரமுதிர அருள் உள்ளம் படைத்தவரானார். இளம்பருவத்திலேயே இவர் அருள் நெஞ்சம் வாய்க்கப்பெற்றிருந்தார்.

கவிமணிக்குப் பதினான்கு வயதிருக்கும். அப்பொழுது தேரூரில் உள்ள ஒரு கோவிலில் பூசாரி ஒருவன் ஓர் ஆட்டை வெட்டிப் பலி கொடுத்ததை இவர் நேரில் கண்டார். குருதி பீறிட்டுப் பாய்ந்ததையும், குருதியை அள்ளியள்ளி முகத்தில் பூசிக்கொண்டு பூசாரி வெறிவந்து ஆடியதையும் கண்ட தேசிகவிநாயகம் பதறிப்போனார்; தெய்வத்தின் பெயரால் இப்படியும் ஒரு கொலைச்செயல் நடப்பதா என்று துடிதுடித்தார்; தமது நெஞ்சத் துடிப்பையெல்லாம் ஒரு பாடலாகப் பாடிமுடித்

தார். எவ்வுயிர்க்கும் துன்பம் இழைத்தல் கூடாது என்னும் அருள் நெஞ்சம் அப்பொழுதே இவரிடம் அரும்பத் தொடங்கிவிட்டது.

**படிக்கும் பழக்கம்**

'படிக்கும் பழக்கத்தை மனிதன் ஓரளவோடு நிறுத்திவிடுகின்ருனே!' இறக்கும் வரை கற்காமல் இருக்கின்ருனே!' என்று வள்ளுவர் வருந்தியுரைக்கின்ருர். கவிமணி அதனை நன்குணர்ந்தமையால் எப்பொழுதும் படித்துக்கொண்டேயிருந்தார். இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தபோதும், இவர் படிப்பதை நிறுத்தியதில்லை.

**ஊக்குவிக்கும் பண்பு**

வளர்ந்துவிட்ட எழுத்தாளர்கள், வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களைப் பாராட்டுவதைக் காண்பது அரிது. ஆனல், கவிமணியோ இளம் எழுத்தாளர்களைப் பாராட்டி, ஊக்கமூட்டுவது வழக்கம். கவிதை எழுதுபவர்களோ கட்டுரை எழுதுபவர்களோ, கதை எழுதுபவர்களோ தம்மிடம் வந்தால், குறைகளை எடுத்துக்காட்டி அவர்களுடைய ஊக்கத்தைக் குன்றச்செய்யமாட்டார். அவர்கள் எழுதியவற்றுள் நல்லன போற்றி, 'இப்படித்தான் எழுதவேண்டும்; அது நன்ருய் இருக்கிறது; இது நன்ருய் இருக்கிறது; இன்னும் நன்ருய் எழுத வேண்டும்' என்று சொல்லி, மேலும் மேலும் எழுதத் தூண்டுவார். இவ்வாறு பிறரையும் வளர்த்துவிட எண்ணும் இயல்பு இவரிடம் மிக்கிருந்தது.

**எளிமை வாழ்வு**

எவரேனும் தம்பால் வந்து, பிறரைப்பற்றிக் குறைகள் சொன்னால், அவற்றைச் செவிகொடுத்துக் கேட்கமாட்டார்; தாமும் பிறரைப்பற்றி அவர் இல்லாதபொழுது குறைகள் பேசமாட்டார்; குறை கண்டால் நேரிலேயே அன்பாக எடுத்துச்சொல்லி, அவரைத் திருத்துவார். வெளிப்பகட்டை இவர் ஒரு சிறிதும் விரும்பியதில்லை; எல்லாவற்றிலும் எளிமையையே விரும்பினார். ஆடையில் எளிமை, தோற்றத்தில் எளிமை, பேச்சில் எளிமை, எழுத்தில் எளிமை, பழகுவதில் எளிமை அனைத்திலுமே எளிமைதான்.

இவரிடத்தில் எளிமை குடிகொண்டிருந்தமையால், ஆடம்பரத்தை விரும்பவில்லை; ஆடம்பரத்தை விரும்பாமையால் புகழையும் விரும்பவில்லை. புகழை விரும்பாத காரணத்தால் இவரைப் பாராட்டப் பலர் அழைத்தும் இவர் செல்லவில்லை; ஆயினும், தவிர்க்கமுடியாத சில இடங்களுக்கே சென்று வந்தார். யார் புகழை வெறுத்து ஒதுக்குகிறார்களோ, அவர்களைப் புகழ் சுற்றிச்சுற்றி வந்துகொண்டே யிருக்கும். புகழ் அவர்களைவிட்டு விலகவே விலகாது. தன்னை வெறுத்து ஒதுக்கிய கவிமணியைப் புகழ் சூழ்ந்துகொண்டே யிருந்தது.

**உயர்பண்பு**

சுற்றுச்சூழலை அறிந்து நடந்துகொள்ளும் பண்பும் இவரிடம் இருந்தது. ஒரு சமயம் திருமண விருந்து ஒன்றில் இவர் கலந்துகொள்ள நேர்ந்தது.

அங்கே கூட்டம் மிகுதியாக இருந்தது. அனைவரும மகிழ்ச்சியுடன் விருந்துண்டு களிப்பில் மூழ்கியிருந் தனர். அப்பொழுது இவருக்கு ஒரு தந்தி வந்தது. அதைப் பிரித்துப் பார்க்காமலே சட்டைப் பையில் வைத்துக்கொண்டார்; ஏனெனில், அது வருத்தம் தருஞ் செய்தியாக இருந்தால், மகிழ்ச்சியுடன் இருக்கும் அனைவரும் வருந்துவரே என்று கருதி அவ்வாறு செய்தார். அன்று மாலை வரை இவர் அதைத் தொடவேயில்லை; எல்லாரும் கலைந்து சென்ற பிறகு அதைப் படித்துப் பார்த்தார். உண்மையில் அது வருத்தம் தருஞ் செய்தியாகவே இருந்தது. இவருடைய மருமகள் இறந்துவிட்ட தாகச் செய்தி வந்திருந்தது.

கவிமணி, இத்தகைய உயரிய நல்லியல்புகளுக்கு உறைவிடமாக விளங்கி வந்தமையால், உயர்ந்த மனிதராக முடிந்தது.

## உ. மணிக்குயில் தேசிகவிநாயகம்

தேசிகவிநாயகத்தின் கவிமணம் தமிழ் நாடெங்கும் பரவியது. கவிமணத்தை நுகர்ந்து மகிழ்ந்த தமிழ் நெஞ்சங்கள் இவரைக் கண்டு மகிழவும், போற்றிப் பாராட்டவும் துடித்துக் கொண்டிருந்தன. ‘எங்கள் ஊருக்கு வருக, எங்கள் ஊருக்கு வருக’ என்று அழைப்பு வந்தவண்ண மாகவே இருந்தது. இவர்தாம் புகழை விரும்பாத புண்ணியராயிற்றே! ‘இயலாது’ என்று இவர் எழுதி

விடுவார். என்றாலும் அன்பை வெல்ல முடியுமா? அன்புக்காகக் கட்டுப்பட்டுத் தவிர்க்க முடியாமல் சில பாராட்டுகளை இவர் ஏற்றுக்கொண்டார்.

**கவிமணி**

முதன்முதலாகக் கவிஞர் பெருமான் தேசிக விநாயகத்தைப் பாராட்டிய பெருமை சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தையே சாரும். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதாம் ஆண்டு, டிசம்பர் மாதம், இருபத்து நான்காம் நாள், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பாராட்டு விழா நடைபெற்றது. அவ் விழாவுக்குத் தலைமை தாங்கியவர், தமிழவேள் உமாமகேசுவரனார் ஆவர். அவர் தேசிகவிநாயகத்தின் அருமை பெருமை களையும் கவிதைச் சிறப்பையும் பாராட்டிப் பேசிக் 'கவிமணி' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினார். அன்றுமுதல் இவருடைய இயற்பெயர் சுருங்கிக் கவிமணி என்னும் பெயரே மேலோங் கியது. கவிமணி என்று பாராட்டப்பெற்ற இந்த மணிக்குயில், இனிய கீதங்களைப் பாடிப்பாடி நம்மை மகிழ்வித்துக்கொண்டேயிருந்தது.

கவிமணி எவ்வளவுக் கெவ்வளவு புகழை வெறுத்தாரோ, அவ்வளவுக்கவ்வளவு புகழ் இவரை விரும்பியது. கவிமணிப் பட்டம் பெற்ற பிறகு நாளுக்கு நாள் இவர்தம் புகழ் வளரலாயிற்று. கவி மணியின் வாழ்நாளிலேயே மிகச் சிறந்த பாராட்டு என்று சொன்னால், அஃது ஆத்தங்குடியில் நடந்த பாராட்டாகத்தான் இருக்க முடியும்.

**பாராட்டுகள்**

கவிமணியின் பாடல்களைத் தமிழ் நாட்டிற்கு முதன்முதல் அறிமுகஞ்செய்துவைத்த பெருமை, 'குமரன்' என்னும் இதழை நடத்தி வந்த தமிழறிஞர் சொ. முருகப்பஞரையே சாரும். அவருடைய முயற்சியாலேயே ஆத்தங்குடியில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. பாராட்டென்ருல் கவி மணி ஒப்புக்கொள்வாரா? அதஞல் 'ரசிகமணி' டி. கே. சிதம்பரநாதரின் துணையால் இவரை அழைத்து வந்தனர். செட்டிநாட்டரசர் அண்ணு மலை வள்ளல் கவிமணியை வரவேற்று, மிகச் சிறந்த சொற்பொழி வாற்றிப் பொன்ஞடை போர்த்திச் சிறப்புச்செய்தார். பழங்கால மன்னர்கள் தம் அரண்மனையில் புலவர்களுக்குச் சிறப்புச் செய்த காட்சிபோல் அந்தக் காட்சி விளங்கியது. செட்டி நாட்டரசர் பெருமிதத் தோற்றத்துடன் மேடையில் ஏறி நின்று, பொன்ஞடையை எடுத்து விரித்து, மகிழ்ச்சி பொங்க, அழ்காக அமைதியாகப் புலவரை மதிக்கும் பொறுப்போடு கவிமணிக்குப் போர்த்திய காட்சியும், கண்ணீர் மல்கக் கைகுவித்துப் பணி வோடு தலைவணங்கி நின்று, கவிமணி அதனை ஏற்றுக்கொண்ட காட்சியும் கண்டு களித்தவர்க ளுடைய நெஞ்சங்களிலும் கண்களிலும் இன்றும் நின்று நிலவுகின்றன. பாராட்டென்ருல் அஃதன்ரே பாராட்டு!

கவிமணி பாடிய ஒரே ஒரு வெண்பாவைப்பற்றி 'ரசிகமணி' நெடுநேரம் பேசிஞர்; பொருள் கூருமல், திரும்பத்திரும்ப அதனைப் பாடி இன்பத்தில்

திளைத்தார்; கேட்டோரையும் திளைக்கவைத்தார். தமிழறிஞர்கள் பாராட்டிப் பேசியபோது, கவிமணி நாணித் தலைகுனிந்தே வீற்றிருந்தார். கவிமணி நம் பாடலைக் குழந்தைகள் பாடி ஆடி நடித்தபோது அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தார்; சிறப்புற நடித்த சிறுவன் ஒருவனை ஆரத்தழுவிக்கொண்டார்.

கவிமணியின் நன்றியுரை

பொன்னாடை போர்த்தப்பெற்ற கவிமணி எழுந்து நின்று, கண்கலங்க, மெய்ந்நடுங்க, சொல் தடுமாற, உணர்ச்சிவயமாகி, அன்பு பொங்கத் தமக்கே உரிய அடக்க உணர்வுடன் சில மொழிந் தார். அம் மொழிகளில்தான் எவ்வளவு அடக்கம்! எவ்வளவு பண்பு! எவ்வளவு உணர்ச்சி! 'யானைக்குப் போர்த்தவேண்டிய பொன்னாடையை ஆட்டுக் குட்டிக்குப் போர்த்திவிட்டீர்கள். நான் இத்தகைய பாராட்டுகளுக்குத் தகுதியுடையவனா? எனினும் என் தமிழ்த்தாய்க்குச் செய்யப்பெற்ற சிறப்பு களாகவே இதனைக் கருதுகிறேன்' என்று பண்பும் பணிவுந்தோன்ற மொழிந்தார்.

எழுபதாம் ஆண்டு விழா

1944ஆம் ஆண்டு திருநெல்வேலியில் ஒரு பெரிய பாராட்டு விழா நடைபெற்றது. அதன் பின்னர், நாகர்கோவிலில் கவிமணியின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா மிக்க சிறப்புடன் நடை பெற்றது. இந்திய அரசில் அந் நாள் நிதியமைச்ச ராய் இருந்த ஆர். கே. சண்முகனார் பெருமக்கள் பலருடன் நேரில் வந்து, கொங்கு நாட்டு மக்கள்

சார்பில் கவிமணிக்குப் பாராட்டு விழா நடத்திச் சிறப்புச் செய்தார்.

சொந்த ஊரில் சிறப்பு

சொந்த ஊரில் யாருக்கும் அவ்வளவு புகழோ பெருமையோ இருப்பது அரிது. ஆனால், கவிமணிக்கு இவர் பிறந்த ஊரில் எல்லையில்லாப் புகழ் இருந்தது. அவ்வூர் மக்கள் கூடிக் கவிமணியின் பெயரால் ஒரு மண்டபம் எழுப்பினர்; பெரும் பொருட் செலவில் கண்ணையும் கருத்தையும் கவரும்வண்ணம், கவிமணியின் வாழ்நாளிலேயே அதனைக் கட்டினர்; இவருடைய உளங்கனிந்த வாழ்த்தையும்பெற்றனர்.

நாகர்கோவில் நகரிலே பொதுமக்களின் நன்கொடையால் 'கவிமணி நிலையம்' என்னும் ஓர் அழகிய மண்டபமும் அதன்பின் உருவாகியுள்ளது.

குரல் ஒடுங்கியது

தமிழகம் முழுமையும் தன் இனிய குரல் ஒலியைப் பரப்பிக்கொண்டிருந்த மணிக்குயில், கி. பி. 1954ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இருபத்தாறும் நாள், தன் குரலைச் சிறிதுசிறிதாக ஒடுக்கிக் கொண்டது. குரலை ஒடுக்கிக்கொண்டாலும், பாடல்களிலே பதிவு செய்யப்பட்ட அந்தக் குரல், தென் பொதிகைத் தென்றலென நம் செவிகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது; நமது உள்ளங்களை உருக்கிக்கொண்டேயிருக்கிறது.

# 3. விடுதலைக்குயில் பாரதியார்

## (கி. பி. 1882 — 1921)

### தோற்றுவாய்

' நமக்குத் தொழில்கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோரா திருத்தல் ' —

எனக் கவிதையை உயிர்மூச்சாகக் கொண்டு, கடைசி மூச்சு உள்ளவரை நாட்டிற்கே உழைத்து, நொடிப்பொழுதும் சோர்வின்றி வாழ்ந்தவர் எவரேனும் உளரோ என்றால், அவர்தாம் பாவலர் சி. சுப்பிரமணிய பாரதியார்.

### பெற்றோர்

தேன் இருக்கும் சோலை சூழ்கின்ற தென் இளசை நகராகும் எட்டையபுரம். அங்குச் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து, எட்டையபுர அரண்மனையில் பணியாற்றி, அவைப் புலவராய் வீற்றிருந்து புகழ் பெற்றவர் சு. சின்னசாமி ஐயர் ஆவர். அவர், அன்னை மொழியாகிய தமிழை ஆய்ந்துணர்ந்தவர்; தாமே முயன்று ஆங்கிலம் கற்றவர்; மேலைநாட்டுக் கணக்கியல் முறையிலும் ஓரளவு வல்லவர். அவரது நுண்ணறிவும் நாவன்மையும் அவர்பால் அனைவரையும் அன்பு கொள்ளச் செய்தன. அதுபோலவே அவருடைய பெருங் குணமும், பரந்த மனமும் அவர்பால் அனைவருடைய நன்மதிப்பையும் நட்பையும் உரிமையாக்கின.

சின்னசாமி ஐயர், உறவு முறையிலே இலக்குமி என்னும் நங்கையைத் திருமணம் செய்து கொண்டார். பெயருக்கேற்ற பேரழகுகொண்ட அவ்வம்மையார் அருங்குணங்கள் பலவும் ஒருங்கு பெற்றவர் ஆவார். அவர்கள் இருவரும் கருத்து ஒருமித்த இல்லறவாழ்க்கை நடத்தினர்; அதன் பயனாக ஆண்மகவு ஒன்றை ஈன்றனர். அறிவறிந்த அம் மகன் 11-12-1882 ஆம் ஆண்டு பிறந்தான். பெற்றோர் மகனுக்குச் சுப்பிரமணியன் என்று பெயரிட்டு மகிழ்ந்தாலும், அனைவரும் செல்லமாகச் சுப்பையா என்றே அழைத்தனர். சுப்பையாவே பிற்காலத்தில் பாடுங்குயில் சுப்பிரமணிய பாரதியாராக ஆனார்.

## அ. இளமை வாழ்வு

### கல்வி

சுப்பையா குழலும் யாழும் நாண மழலை மொழி பேசினான்; சிறுகையை நீட்டிக் குறுகுறு நடந்தான்; இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் நெய்யுடை உணவை மெய்பட விதிர்த்தும் தம் பெற்றோரை மயக்கினான். காலம் கடந்தது; சுப்பையாவுக்கு ஐந்தாம் ஆண்டு நடந்தது.

அறிவும் அழகும் செறிந்த பாரதியார்க்கு அவர் தந்தையார் முதற்கண் எழுத்தறிவித்தார்; சிறுசிறு தமிழ்ச் செய்யுள் நூல்களையும் கற்றுக் கொடுத்தார்; ஆங்கில எழுத்துகளையும் அறிமுகப் படுத்தினார். பாரதியாரும் தமிழ்ப் பாடங்களை

மனத்தில் பதித்துக் கொண்டார்; தமிழ்ப் பாடல்களைத் தம் அமுதக் குரல்கொண்டு பாடிப் பழகினார். குலவித்தை கல்லாமல் பாகம்படுமன்றோ! ஆதலின், தந்தையின் தமிழறிவு முந்தி வந்து பாரதியாரைச் சேர்ந்தது. தந்தையார் உரிய காலத்தில் பாரதியாரைப் பள்ளியிற் சேர்த்தார்.

பாரதியார் பள்ளியில் தமிழில் தனிக் கருத்துச் செலுத்தினார். தேர்வுக் காலங்களில் தமிழில் முதல் மதிப்பெண்ணும், பிற பாடங்களில் தேர்ச்சிக்குரிய மதிப்பெண்களும் இவர் பெற்று, ஒவ்வோர் ஆண்டிலும் வெற்றி பெற்றுவந்தார். இச் செயல் ஆசிரியர் எல்லார்க்கும் வியப்பைத் தந்தது.

தொடக்கக் கல்வி நிறைவெய்திய பின்னர்ப் பாரதியார் திருநெல்வேலி இந்துக் கல்லூரிப் பள்ளியிலே சேர்க்கப்பெற்றார் கல்வியில் இவருடைய கருத்தூன்றவில்லை. அக் கல்வி முறை இவரைக் கவரவில்லை. அதனைப் பற்றி இவரே பிற்காலத்தில் மனம் வெறுத்துப் பாடியுள்ளார்.

'செலவு தந்தைக்கோர் ஆயிரம் சென்றது
தீது எனக்குப்பல் லாயிரம் சேர்ந்தன;
நலமோர் எள்துணையும் கண்டிலேன் இதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்.'

பாரதியார் இவ்வாறு அக்காலக் கல்வி முறை பற்றிக் கூறியுள்ளார். கி. பி. 1894 முதல் 1897 வரை இவர் அங்குப் பயின்றார் ; ஐந்தாம் படிவம் வரை கல்வி கற்றார். அந் நாளில் திருநெல்வேலியில் வாழ்ந்த தமிழறிஞர் பலரின் தொடர்பு பாரதியார்க்கு

ஏற்பட்டது. இவர் வண்டமிழிற் கவிதைகள் வரைந்து மகிழ்வார். இவரது பாட்டியற்றும் திறன் கண்டு தமிழன்னையின் தனிமகன் என்று அனைவரும் இவரைப் பாராட்டினர்.

பாரதியாரின் பாட்டுத்திறம் கண்டு பாராட்டிப் புகழ்ந்தவர் பலர்; இளமையில் இவ்வளவு புகழா என்று இகழ்ந்தவர் சிலர். பாரதியாருடைய நண்பர்களுள் காந்திமதிநாதப் பிள்ளை என்பவரும் ஒருவர். அவர் பாரதியாரிடம் அன்பு கொண்டிருந் தாலும், அவர் மனத்தில் அழுக்காறு அரசோச்சியது. ஒருநாள் அவர் பாரதியாரைத் தாழ்த்த எண்ணி, 'பாரதி சின்னப் பயல்'—என்னும் ஈற்றடியைக் கொடுத்து ஒரு வெண்பாப் பாடச் சொன்னார். பாரதியாரா அதற்கு அஞ்சுபவர்? இவர் அந்த இறுதியடியையே தக்க கருவியாகக் கொண்டு காந்திமதிநாதப் பிள்ளை நாணுமாறு செய்தார். இதோ அந்த வெண்பாவின் இறுதி இரண்டடிகள்,

'காரதுபோல் நெஞ்சிருண்ட காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்!'

'கருமேகம் போல மனம் இருண்டு கிடக்கும் காந்திமதி நாதனைப் பார்! அதி சின்னப் பயல்! (மிகச் சிறியவன்)' என்பது இதன் பொருள். காந்தி மதிநாதன் வெட்கித் தலைகுனிந்தார்.

திருமணம்

பாரதியாருக்குப் பதினைந்தாம் ஆண்டு தொடங்கியது. இவர்தம் தந்தையார் பாரதி யாருக்குத் திருமணம் செய்துவைக்கத் துணிந்தார்;

செல்லம்மாள் என்னும் நற்குண நங்கையை மண முடித்தார். இத் திருமணம் கி. பி. 1897இல் நடந்தது. நற்பண்புகள் நிரம்பிய அவ்வம்மையார் பாரதியாரின் இயல்புக்கு ஏற்ப நடந்து குடும்ப வாழ்வுக்குப் பெருமை சேர்த்தார்.

### தந்தையார் மறைவு

பாரதியாரின் தந்தையார் ஒரு பஞ்சாலை நடத்தி வந்தார். பஞ்சாலை பெரும் இழப்புக்கு உள்ளாகியது. இழப்பைத் தாங்காமல் உள்ளம் உடைந்த சின்னசாமி ஐயர் நோயுற்றார். அந் நோயே அவருக்கு இறுதியாயிற்று. கி. பி. 1898ஆம் ஆண்டு சின்னசாமி ஐயர் தம் அருமை மகனையும் உறவினர்களையும் மீளாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு இயற்கையொடு கலந்தார்.

### காசி வாழ்க்கை

பாரதியாரின் அத்தை குப்பம்மாளும், அவர் கணவர் கிருட்டிண சிவன் என்பவரும் பாரதியாரின் தந்தை இறந்த செய்தி கேட்டு எட்டையபுரம் வந்திருந்தனர். அவர்கள் பாரதியாரைக் காசிக்கு வருமாறு அழைத்துச் சென்றனர். காசிக் கல்லூரி ஒன்றில் பாரதியார் சேர்க்கப் பெற்றார். அங்கே இவர் வடமொழியும் இந்தியும் பயின்றார்; தேர்வில் வெற்றியும் பெற்றார். எனினும், 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்பதில் இவர் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

### அரசவைக் கவிஞர்

எட்டையபுர மன்னர், டில்லியில் நடைபெற்ற அரசாங்க விழாவிற்குச் சென்றவர், காசிக்கும்

சென்று பாரதியாரைக் கண்டார்; தம்முடன் எட்டையபுரத்துக்கு வருமாறு அழைத்தார். பாரதியாரும் உடன்பட்டு எட்டையபுரம் வந்து சேர்ந்தார். மன்னரின் எண்ணத்திற்கிணங்கப் பாரதியார் அரசவைக் கவிஞரானார்.

ஒருநாள் காலையில் அண்ணாமலை ரெட்டியாரைப் பற்றிய பேச்செழுந்தது. அவர் கழுகுமலை முருகன் மீது பழகுதமிழில் அழகொழுகக் காவடிச் சிந்து பாடியவர். இந்தக் காவடிச் சிந்து பொது மக்களும் பாடத்தக்க எளிமை பொருந்தியது. பாரதியார் பாடல்களோ புலவர்களுக்கே விருப்ப மூட்டுபவை. ரெட்டியாரின் பாடல்களோ பொது மக்களைக் கவர வல்லவை. இவைபோன்ற பாடல்களைப் பாரதியாரால் பாட இயலாது என்று அங்கிருந்தோர் கூறினர். மன்னரும் அவையோர் கருத்தையே வழிமொழிந்தார். இதைக் கேட்ட பாரதியார் சிரித்தார். 'இன்றே காவடிச் சிந்து பாடி வருவேன்' என்று கூறி அங்கிருந்து சென்றார்.

பாரதியார் அன்று மாலை அரண்மனைக்குச் சென்றார். அவைப் புலவர்கள் அங்கில்லை அவர்களுக்கு ஆள் அனுப்பப் பெற்றது: வந்து கூடினர். பாரதியார் சிந்து பாடினார்.

பச்சைத் திருமயில் வீரன்
அலங்காரன் கௌமாரன்—ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன்—அடி
பணிசுப்பிர மணியர்க்கருள்
அணிமிக்குயர் தமிழைத் தரு
பத்தர்க் கெளியசிங் காரன்—எழில்
பண்ணும் அருணாசலத் தூரன்...'

இப் பாடலைக் கேட்ட அரசரும் புலவர்களும் 'அண்ணாமலை ரெட்டியாரோ பொது மக்கட்கு மட்டுமே பாடினார். பாரதியாரோ பொது மக்கட்கும் புலவர்கட்கும் பாடும் திறம் வாய்ந்தவர்' என்பதை ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டனர்.

## ஆ. சென்னை வாழ்வு

### இதழாசிரியர்

தருமம் மிகு சென்னை மாநகரம் வருக எனப் பாரதியாரை வரவேற்றது. சென்னையிலிருந்து அந் நாளில் செய்திகளைத் தாங்கிவந்த நாளிதழ் 'சுதேசமித்திரன்' என்பதாகும். பாரதியார்பால் பரிவு கொண்ட அவ்விதழின் ஆசிரியர் தமது நாளிதழின் துணையாசிரியராக இவரை அமர்த்திக் கொண்டார். பெருமையான பதவி; வருவாய் குறைந்த பணி. எனினும், அப் பணியை மனநிறைவுடன் ஏற்றுக்கொண்டார் பாரதியார்.

### தேசிய இயக்கப் பணி

நாட்டின் இழிநிலையை உணர்ந்தார் பாரதியார்; அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்திற்கொண்ட மக்களுக்கு உணர்ச்சியூட்டக் கருதினார்; அதற்கேற்ற கருவியாகச் 'சுதேச மித்திரன்' நாளிதழைப் பயன்படுத்தினார்.

'எளிய சொற்கள்; எளிய நடை; எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம்; பொதுமக்கள் விரும்பும் மெட்டு'—ஆகியவற்றைக் கொண்டன

வாகவே இருந்தன இவருடைய பாடல்கள். சொல்லுக்கு மெருகேற்றிப் படிப்போரின் நரம்புக்கு முறுக்கேற்றி உணர்ச்சியூட்டும் இவர் கவிதைகள் மக்களைக் கிளர்ச்சி கொள்ளச் செய்தன. நாட்டு விடுதலை பற்றிய கவிதைகளில் தீப்பொறி பறந்தது; படிப்போரின் மனத்தில் எழுச்சி பிறந்தது. கோழை வீரனானான்; முதியவன் இளைஞனானான். தமிழில் ஒரு மறுமலர்ச்சி தோன்றிற்று; தமிழர்களிடையே ஒரு புதிய விழிப்புணர்ச்சி உண்டாயிற்று.

விடுதலை வேட்கையில் மக்களை வீறுகொள்ளச் செய்யும் பாரதியாரின் கவிதைகளைத் தம் நாளேட்டில் வெளியிடுவதற்கு அதன் ஆசிரியர் கலக்கமடைந்தார்; ஆங்கிலேயரின் பார்வை தமக்குத் தீங்கை விளைவிக்குமோ! என அஞ்சினார்; கவிதைகளின் உணர்ச்சிக் கடுமையைச் சற்றே தணிக்குமாறு வேண்டினார். அவருடைய வேண்டுகோள் பாரதியாரைச் 'சுதேசமித்திரன்' அலுவலகத்திலிருந்து வெளியேறத் தூண்டியது.

உடலுக்குச் சிறையிடலாம்; உள்ளத்திற்குச் சிறையிட முடியுமா? எண்ணத்திற்குச் சிறையிட்ட இதழைவிட்டு விலகிய பாரதியாரைத் திருமலாச்சாரியார் என்பார் எதிர்கொண்டு அழைத்துக் கொண்டார். 'அவர் பாரதியாரின் நண்பர்; நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்டவர்; பாரதியாரை நாட்டு விடுதலைக்குப் பயன்படுத்திக்கொள்ள முனைந்தார். இருவரும் கலந்துரையாடி 'இந்தியா' என்னும் இதழைத் தொடங்கினர். பாரதியாரே

அதன் ஆசிரியர். கி. பி. 1908இல் அவ்விதழ் தொடங்கப் பெற்றது. 'சுதேசமித்திரன்' தவழ்ந்த கைகளிலெல்லாம் 'இந்தியா' வீற்றிருந்தது.

### கவிதைகள் வெளியீடு

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கவிப்பெருக்கால் மக்கள்தம் உள்ளத்தைக் கொள்ளைகொண்டார் பாரதியார். அக் கவிதைகள் எல்லாம் நாட்டு மக்களின் கைகளில் எக் காலத்திலும் இருந்திட வேண்டுமென இவருடைய நண்பர்கள் விரும்பினர்; அதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். அம் முயற்சி கைகூடிற்று. கி. பி. 1908இல் 'சுதேச-கீதங்கள்' என்னும் தலைப்பில் பாரதியார் பாடிய கவிதைத் தொகுதியின் முதற் பகுதி வெளியாயிற்று.

### செம்மல் சிதம்பரனார் சந்திப்பு

ஓட்டப்பிடாரம் பெற்றெடுத்த சிங்கம், செம்மல் சிதம்பரனார் தூத்துக்குடியில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் கையிலும் 'இந்தியா' கொலுவீற்றிருந்தது. அவர் வீர சுதந்திரம் வேண்டி நிற்பவரானார். அந் நாளில் பாரதியாரும் சிதம்பரனாரும் ஒருவரையொருவர் நேரில் கண்டதில்லை. ஆனால், இருவரும் ஒருவர்மீது ஒருவர் உள்ளத்தால் நட்புக்கொண்டிருந்தனர்.

செம்மல் சிதம்பரனார் வழக்கொன்றின் பொருட்டுச் சென்னை செல்ல நேர்ந்தது. சிதம்பரனார் தம் அலுவல்களை முடித்துக்கொண்டு பாரதியாரைக் காணவேண்டும் என்னும் பேராவலொடு 'இந்தியா' அலுவலகத்துக்குச் சென்றார்.

திருமலாச்சாரியார்தாம் முதலில் தென்பட்டார். சிதம்பரனார் அவரிடம் தாம் பாரதியாரைக் காண வந்திருப்பதாகக் கூறினார். அவரோ மாடியை நோக்கி உரக்கக் கூவிப் பாரதியாரை அழைத்துத் 'தூத்துக்குடியிலிருந்து ஒருவர் உங்களைக் காண வந்துள்ளார்' என்று தெரிவித்தார்.

சிதம்பரனார் மாடிக்குச் சென்றார். ஒளி படைத்த கண்கள்; உறுதி கொண்ட நெஞ்சம்; முறுக்கிவிட்ட மீசை; முண்டாசுக் கட்டு—இவை யனைத்தும் கொண்ட பாரதியாரை அடையாளம் கண்டுகொண்ட சிதம்பரனார் பாரதியாருக்கு வணக்கம் தெரிவித்தார். யாரென அவர் வினவு முன் சிதம்பரனார் ஒட்டப்பிடாரம்...எனத் தொடங் கினார். அந்நொடியே பாரதியார் 'ஓ! உலகநாதப் பிள்ளை குமாரர் சிதம்பரமா!' எனக் கூறி, அவரைக் கட்டித் தழுவினார். இருவரும் பல மணி நேரம் கலந்துரையாடினர். பின்னர்ச் சிதம்பரனார் தம் ஊர் திரும்பினார்.

### விடுதலைக் கிளர்ச்சி

செம்மல் சிதம்பரனார் இலங்கைக்கும் இந்தியா வுக்கும் இடையே கப்பல் ஓட்டி ஆங்கிலேயர்க்குப் போட்டியாக வாணிகம் நடத்தினார். அதனைத் தடுக்க முயன்ற ஆங்கிலேயர் தோல்வியே கண்டனர். அந்நேரத்தில் விடுதலைக் கிளர்ச்சி மேலோங்கியது. லாலா லஜபதிராய்மீது குற்றஞ் சாட்டிய ஆங்கில அரசு அவரை நாடு கடத்தியது. இதனால் இந்திய மக்கள் கொதித்தெழுந்தனர். ஆயினும் மக்கள் செய்வதறியாது திகைத்தனர்.

இச் சமயத்தைப் பயன்படுத்திச் செம்மல் சிதம்பரனாரையும், சுப்பிரமணிய சிவாவையும் ஆங்கில அரசு சிறைசெய்தது; விசாரணை செய்வது போல் பாசாங்குசெய்து, இறுதியில் சிதம்பரனார்க்கு இருபதாண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்தது. விடுதலைவீரர் சிதம்பரனார் வெங்கொடுமைச் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் சந்திப்பு

இச் செய்தி சென்னையில் வாழ்ந்த பாரதியார் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினாற்போலப் பாய்ந்தது. பாரதியார் சென்னையிலிருந்து சிட்டெனப் பறந்து வந்தார்; சிதம்பரனாரைச் சிறைக் கம்பிகளுக்கிடையே கண்டு மனம் நொந்தார்; அவரைக் கட்டித் தழுவினார்; கண்ணீர் உகுத்தார். சிதம்பரனாரோ அஞ்ச வேண்டா என்றும், நாட்டுணர்ச்சியைப் பாட்டுணர்ச்சியால் எழுப்புமாறும், இனிச் சென்னையில் இருப்பது தீங்கை விளைவிக்கும் என்றும், எந்த வழியிலும் சிறை புகாமல் இருக்க வேண்டும் என்றும் அன்புக் கட்டளையிட்டார். ஆங்கில அரசின் அடக்குமுறைக் கரங்கள் தொட முடியாத இடம் பாண்டிச்சேரி எனப்படும் புதுச்சேரியாகும். அங்குப் பாரதியார் செல்லவேண்டும் என்றும், அங்கிருந்துகொண்டே ஆங்கில ஆட்சியை அடியோடு அகற்றும் பணியில் ஈடுபடவேண்டும் என்றும் சிதம்பரனார் நெஞ்சம் நெகிழ்ந்து கூறினார். விழிகளிலே நீரருவி பாயப் பாரதியார் சிறைச் சாலையை விட்டு வெளியே வந்தார்.

## 'இந்தியா' தடுக்கப்பட்டது

பாரதியார் சென்னை மீண்டதும் 'இந்தியா' புதிய வீறுடன் வெளிவரத் தொடங்கியது. ஆங்கில எதிர்ப்பு முழக்கங்கள் எல்லாப் பக்கத்திலும் எதிரொலித்தன. ஆங்கில ஆட்சியின் அடக்கு முறைகள் அம்பலப்படுத்தப்பட்டன. கொடுங் கோல் ஆட்சியின் கொடுமைகள் அடுக்கடுக்காக எடுத்து விவரிக்கப்பட்டன. மேலோர்கள் வெஞ் சிறையில் வீழ்ந்துகிடப்பதையும், நூலோர்கள் செக் கடியில் நொந்து கிடப்பதையும் பாரோர் உணரப் பாரதியார் எழுதினர்; திக்கெட்டும் மக்கள் சினந்தெழ வேண்டிய இன்றியமையாமையை எடுத் தியம்பினர்.

ஆங்கில ஆட்சி அதனைக் கண்டு அஞ்சியது; மக்களின் விழிப்புணர்ச்சி கண்டு கலங்கியது. ஆங்கி லேயரின் சீற்றக்கணை 'இந்தியா' மீது பாய்ந்தது. அவ்விதழின் உரிமையாளர் திருமலாச்சாரியார் சிறைசெய்யப்பட்டார். அவ்விதழும் தடை செய்யப் பட்டது.

பாரதியாரைச் சிறைசெய்யவும் ஆணைபிறப் பித்தது ஆங்கில அரசு. உடனே நண்பர்கள் பலரும் நாட்டுத் தலைவர் சிலரும் பாரதியாரைப் புதுச் சேரிக்குச் செல்லுமாறு வற்புறுத்தினர். சிறையில் சிதம்பரனர் கூறியதும் பாரதியார் நினைவுக்கு வரவே, அவர் நண்பர்களின் வேண்டுகோளின்படி புதுச்சேரிக்குப் பயணமானர்.

# இ. புதுவை வாழ்வு

**புதுவை நகர்**

புதுச்சேரி என்பதனைப் புதுவை என்றும் சுருக்க மாக அழைப்பர். அந்நாளில் புதுச்சேரியை ஆண்டு கொண்டிருந்தவர்கள் பிரஞ்சுக்காரர்கள். புதுச்சேரி வாழ் மக்கள் அனைவரும் தமிழர்களே. அவர் பேசும் மொழியும் தமிழே. ஆனால், அங்குப் பிரஞ்சுக் காரர் ஆட்சி நடைபெற்று வந்ததனால் ஆட்சி மொழியாகப் பிரஞ்சு மொழியும் இருந்தது. ஆங்கி லேயரின் அதிகாரம் புதுவைக்குள் புக முடியாது. பிரஞ்சு அரசின் இசைவு இல்லாமல் ஆங்கிலேயர் புதுவைக்குள் எதுவும் செய்யமுடியாது. அது போலவே ஆங்கிலேயரின் ஆட்சிப் பகுதியில் பிரஞ்சு ஆணை செல்லாது. அதனை உணர்ந்த சிலர் ஆங்கில ஆட்சியின் கொடுமைக்கு ஆளாகாமல் புதுவையைப் புகலிடமாகக் கொண்டனர்.

**குவளைக் கண்ணன் உதவி**

பாரதியார் புதுவைக்குப் போனவரல்லர். எங்குப் போய்த் தங்குவது? யாரைக் காண்பது? என்றெல்லாம் பாரதியார் எண்ணித் தயங்கினார். அந் நேரத்தில் உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களையக் குவளைக் கண்ணன் என்பார் முன்வந்தார். அவர் தம் உறவினர் குப்புசாமி ஐயங்கார் முகவரிக்குக் கடிதம் எழுதிப் பாரதியா ரிடம் தந்தார்; உறவினர் வீட்டிலேயே தங்குமாறு சொல்லி விடுத்தார். ஆங்கில அரசின் ஆணை எந் நேரத்தில் பாரதியார் மீது பாயுமோ என்ற நிலையில்

தக்க ஏற்பாட்டுடன் குவளைக் கண்ணனும் நண்பர் சிலரும் பாரதியாரைப் புதுவைக்கு அனுப்பி வைத்தனர். மாற்றுருக் கொண்ட பாரதியார் மறுநாள் காலையில் புதுவையை அடைந்தார்; குப்புசாமி ஐயங்காரின் வீட்டைக் கண்டுபிடித்துக் குவளைக் கண்ணன் கொடுத்த கடிதத்தை அவரிடம் கொடுத்தார். குப்புசாமி ஐயங்காரும் உடன்பட்டுப் பாரதியாரைத் தம் வீட்டில் தங்கவைத்துக் கொண்டார்.

புதுவையில் "இந்தியா"

'இந்தியா' இதழின் உரிமையாளர் திருமலாச்சாரியார் சென்னையில் சிறைசெய்யப்பட்டார் அன்றோ? எத்தகைய குற்றமும் அவர் செய்யவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்து அவரை விடுதலை செய்தது. விடுதலை பெற்ற திருமலாச்சாரியார் சென்னையில் தங்க விருப்பமின்றிப் புதுவைக்கே வந்து சேர்ந்தார்; பாரதியாரைப் பார்த்தார். 'இந்தியா' இதழை மீண்டும் தொடங்குவதென இருவரும் முடிவு செய்தனர். சென்னையில் இருந்த அச்சுப் பொறிகள் புதுவை வந்து சேர்ந்தன. கி. பி. 1909இல் மீண்டும் 'இந்தியா' வெளிவரலாயிற்று. புதுவையிலிருந்தே தமிழகம் முழுவதற்கும் அவ்விதழ் அனுப்பப் பெற்றது. தடை விதிக்கப் பெற்ற 'இந்தியா' தமிழ் மக்களின் கைகளிலே மீண்டும் தவழ்ந்தது; வாடிய பயிர்க்கு வான் மழை போலத் தளர்வுற்ற தமிழர்க்குப் புத்துயிர் கொடுத்தது.

இருவர் தொடர்பு

செக்கிழுத்த செம்மல் சிதம்பரனாரையும், தமிழ்மொழிக் காவலராம் நாவலர் ச. சோம

சுந்தர பாரதியாரையும், பாட்டுக்கொரு புலவன் பாரதியாரையும் ஈன்றெடுத்துப் புகழ்கொண்ட திருநெல்வேலி மாவட்டம் வ. வெ. சுப்பிரமணிய ஐயர் எனும் வீரப் பெருமகனுராலும் சிறப்புப் பெற்றது. தாய் நாட்டன்பில் தலைசிறந்த அவரை அரசியலுலகம் வ.வெ.சு. ஐயர் என்றே அழைத்தது. 'பாரிஸ்டர்' பட்டம் பெற அவர் இலண்டனில் படித்துக் கொண்டிருந்தார்; அங்கிருந்தபடியே இந்தியாவில் ஆங்கில அரசு நடத்தும் அடக்குமுறைகளைக் கூர்ந்து கவனித்துவந்தார்; இந்தியத் தாய் நாட்டில் மக்கள் படும் இன்னல்களை எண்ணிப் பார்த்தார். நெஞ்சம் பொறுக்கவில்லை. அவர் இங்கிலாந்தில் இருந்துகொண்டே அந் நாட்டுக்கு எதிராகத் தம் எதிர்ப்புக் கருத்துகளை எடுத்து முழக்கினுர். ஆங்கில அரசு இவற்றையெல்லாம் பார்த்து வாளாவிருக்குமோ? அவரைச் சிறை செய்யக் காலங்கருதிக் காத்திருந்தது. உடனே, வ. வெ. சு. ஐயர் மாறுவேடம் பூண்டார்; கடலில் குதித்தார்; கலங்காது நீந்திஞர்; உடல் களைத்தாலும் உள்ளம் சலியாமல் பிரஞ்சுக் கடற் கரையை அடைந்தார்; அங்கிருந்து அல்லல் பல வற்றுக்கு ஆளாகித் தாய்த் திருநாடாம் இந்தியா வந்துசேர்ந்தார். ஆங்கில அரசினர் இங்கிலாந்திலிருந்து அவர் தப்பிவிட்ட செய்தியை இந்திய அரசாங்கத்துக்குத் தெரிவித்துவிட்டனர். இந்திய அரசாங்க ஒற்றர் அவரைத் தேடத் தொடங்கினர். இந்தியாவில் ஆங்கிலப் பகுதியில் இருப்பது தமக்குத் தீங்கு என்பதை உணர்ந்த வ. வெ. சு. ஐயர்

அரவிந்தரும், பாரதியாரும் அடைக்கலம் புகுந்த புதுவைக்கே வந்து சேர்ந்தார். நாட்டு விடுதலைக்கு மூவரும் இணைந்து தொண்டாற்றினர்.

அம் மூவரும் கூடிச் செயல்புரிவதை ஆங்கில அரசு ஒற்றர்கள் வாயிலாக அறிந்துகொண்டது. காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் தானே! அம் மூவரும் புதுவையில் இருந்துகொண்டே தங்கள் அரசுக்கு எதிராகச் சதிவேலையில் ஈடு பட்டுள்ளனர் என்று ஆங்கில அரசினர் நம்பினர், அச் சதி வேலையும் 'இந்தியா' இதழ் வாயிலாகவே பரப்பப்படுவதாகவும் நம்பினர் ஆகவே, தங்கள் ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவ்விதழுக்குத் தடை விதித்தனர்; அவ்விதழை விற்போரையும் படிப்போரையும் ஒறுப்பதாக அச்சுறுத்தினர். ஆயினும். மறைமுகமாக அவ்விதழ் மக்களால் ஆதரிக்கப்பெற்றது.

'இந்தியா' நின்றது

பாரதியார், அரவிந்தர், வ. வெ. சு. ஐயர் ஆகிய அம் மூவர் புகழும் இணைந்து பரவியது. அம்மூவரின் கூட்டு தம் அரசுக்கு வேட்டு என்பதை எண்ணிய ஆங்கிலேயர் புதுவை ஆளுநரை அணுகினர்; ஆளுநரைக் கொண்டு அவர்களை அங்கிருந்து அகற்றிவிட முயன்றனர்; எந்த முறை யிலாவது அந்த மூவரையும் புதுவை எல்லையை விட்டு நீக்கி, ஆங்கில ஆட்சி எல்லைக்குக் கடத்திச் சென்று சிறைசெய்யக் கருதினர். ஆனால், அதற்கான திட்டங்கள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீர்

போல் ஆயிற்று. அம் மூவருக்கும் மலைபோல வந்த துன்பம் பனிபோல விலகிற்று.

தோல்வி கண்ட ஆங்கிலேயர் தொடர்ந்து துன்பம் இழைக்கத் துணிந்தனர். ஆங்கிலக் காவல் துறையினர், பிரஞ்சு அஞ்சல்துறை அலுவலகங்களை அணுகினர். புதுவை அஞ்சல் நிலைய அலுவலர்களைத் தம்வயப் படுத்திக்கொண்டு, வெளியூர் செல்ல அஞ்சலகத்துக்கு வரும் 'இந்தியா' இதழ்களைக் கைப்பற்றி அழித்தனர்; பாரதியாருக்கு வரும் பண விடைத் தாள்களைத் தடைசெய்தனர். இன்னும் செய்யத்தகாத இன்னல் என்னென்ன உண்டோ அனைத்தும் செய்தனர் இவ்வாறு மறைமுகமாக நடந்த இழிசெயல்களைப் பாரதியார் அறியார். இத்தகைய இக்கட்டான சூழலில் 'இந்தியா' நிறுத்தப்பட்டது.

**பாரதிதாசனார் தொடர்பு**

புரட்சிக் குரல் கொடுக்கும் குயிலாகப் பொலிந்தவர் பாரதிதாசனார்: அவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம் என்பது. பாரதியார் புதுவையில் வாழ்ந்துவந்த போதிலும் இருவருக்கும் அறிமுகம் ஏற்படவில்லை. ஆயினும், பாரதியார் பாடல்களைப் பாரதிதாசனார் படித்து மகிழ்வதோடு தம் நண்பர்களுக்கும் பாடிக்காட்டுவார். பாரதியாரைப் பாராமலேயே அவர்மீது பற்று வைத்திருந்தார் பாரதிதாசன்.

புதுவையில் நடந்த ஒரு திருமணத்திற்குப் பாரதியார் தம் நண்பர்களுடன் சென்றிருந்தார். பாரதிதாசனாரும் அத் திருமண வீட்டிற்கு வந்திருந்

தார். திருமணம் இனிது முடிந்தது. நண்பர் சிலர் கூடினர்; கனக சுப்புரத்தினத்தைப் பாடுமாறு வேண்டினர். அவரும் மிகுந்த விருப்பத்தோடு, வெண்கலக் குரலில் பாடினர்.

'வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ?'

கனக சுப்புரத்தினத்தின் குரல் 'கணீர்' என்று திருமண வீட்டில் எதிரொலித்தது. பாரதியார் தம் பாடலை ஒருவர் உணர்ச்சி பொங்கப் பாடுவதைக் கேட்டுத் தம்மை மறந்தார். பாடி முடித்ததும் பாரதியார் அங்கு வந்திருப்பதை நண்பர் சிலர் கனக சுப்புரத்தினத்தின் காதில் மொழிந்தனர். உடனே அவர் பாரதியாரிடம் சென்று வணங்கி நின்றார். பாரதியார் அவர் பாடிய திறத்தைப் பாராட்டினர்.

அன்று கொண்ட தொடர்பு இறுதிவரை உறுதியாக நின்றது. கனக சுப்புரத்தினம் அன்று முதல் தம் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார். புதுவையில் பாரதியார் இருந்த வரையில் பாரதிதாசனர் இவரைக் கண்மணிபோலக் காத்துவந்தார். வறுமையால் பாரதியார் வாடிய போதெல்லாம் உரிமையோடு பாரதிதாசனர் உதவிசெய்தார்.

## ஆங்கில அரசின் புலனாய்வு

தமிழ்நாட்டில் விடுதலைத்தீ வீறிட்டெழுந்தது. வாஞ்சி என்னும் விடுதலை வீரர் மணியாச்சிப்

புகைவண்டி நிலையத்தில் திட்டமிட்டபடி மாவட்ட ஆட்சித் தலைவர் (கலெக்டர்) ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தாமும் சுட்டுக்கொண்டு இறந்தார். கொலைவழக்குப் பதிவு செய்யப்பட்டது. அக் கொலைக்கு உடந்தையானவர்களுள் இருவர் புதுவைக்குப் போய்விட்டதாகக் காவல்துறையின ருக்குச் செய்தி கிடைத்தது.

பிரஞ்சு அரசைச் சென்னைக் காவல்துறையினர் நாடினர்; புதுவை அரசின் உயர் அதிகாரிகள் இருவர் துணையுடன் புலனாய்வில் இறங்கினர். மறு நாள் புதுவை நீதிமன்றத்தில் புலனாய்வு செய்த புதுவை அதிகாரியின் குறிப்புகள் ஆய்வு செய்யப் பட்டன. அதன் பின்னர் அரவிந்தர், பாரதியார், வ. வெ. சு. ஐயர் ஆகிய மூவரும் பெரிய இலக்கிய மேதைகள் என்றும், இவர்களுக்கும் ஆஷ் துரை கொலைக்கும் எந்தவிதத் தொடர்பும் இருக்க முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புச் செய்தது. அம் முடிவைப் புதுவை அரசு சென்னை அரசுக்குத் தெரிவித்துவிட்டது.

புகழ் பரவியது

புதுவையில் வாழ்ந்துகொண்டிருந்தபோதே பாரதியார் கி. பி. 1909இல் 'ஜன்மபூமி' என்னும் பெயரில் தம் சுதேச கீதங்களை நூலாக்கி வெளியிட் டார். அடுத்து 'நாட்டுப் பாட்டு' என்னும் பெயரில் பாரதியார் கவிதைகளை முதற் பதிப்பாகப் பரலி. சு. நெல்லையப்பர் வெளியிட்டார். அவர் பாரதியாரின் நண்பர்; பாரதியாரின் கவிதைகளை

நூல் வடிவில் கொணர அரும் பாடுபட்டவர். கி. பி. 1917இல் பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' நூலை வெளியிட்டவர் அவரே. கவிதை வெளியீடு களால் பாரதியாரின் புகழ் எங்கும் பரவியது. அந் நாளில் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், 'வாழும் மிகப் பெரிய கவிஞர்' என்னும் தலைப்பில் பாரதியாரைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டார். இதனால் ஆங்கில நாட்டிலும் இவர் புகழ் பரவியது.

### புதுவையிலிருந்து புறப்பாடு

புகழ்கொண்ட பாரதியார் புதுவையில் ஏறக் குறையப் பதினோராண்டுகள் வாழ்ந்துவிட்டார். புதுவை வாழ்வு இவருக்குக் கசந்துவிட்டது; பாடித் திரியும் அந்த விடுதலைக்குயில் புதுவை என்னும் கூண்டிற்குள் அடைபட்டுக் கிடக்க விரும்பவில்லை. இவர் இவ் எண்ணத்தைத் தம் நண்பர்களிடம் கூறினார். நண்பர்கள் பதறிப் போனார்கள்; புதுவையிலேயே வாழுமாறு இவரை வற்புறுத் தினார்கள். பாரதியார் தம் முடிவை மாற்றிக் கொள்ளாமல் தம் குடும்பத்துடன் புதுவை நகரை விட்டுப் புறப்பட்டார். சுற்றியிருந்த நண்பர்கள் விழியில் நீரொழுக விடை கொடுத்தனுப்பி வைத்தார்கள்.

## ஈ. இறுதி வாழ்வு

### சிறைசெய்யப்படல்

புதுவையிலிருந்து பாரதியார் தம் குடும்பத் துடன் புறப்படும் செய்தி, சென்னைக் காவல் துறை

யினர்க்குத் தெரிந்தது. அப்பொழுதுதான் அவர்களுக்கு ஊக்கம் பிறந்தது; பாரதியாரைச் சிறை செய்யக் காத்திருந்தனர். புதுவை எல்லையைக் கடந்து, ஆங்கில ஆட்சிக்குட்பட்ட கடலூரில் பாரதியார் கால் வைத்ததும் காவலர் இவரைச் சிறைசெய்தனர். பாரதியாரின் மனைவியாரும், குழந்தைகளும் பதறினர்; அழுதனர். காவலர் பாரதியாரைக் கடலூர்ச் சிறையில் வைத்தனர்.

**விடுதலை**

பாரதியார் கடலூரில் சிறைசெய்யப்பட்ட செய்தி சென்னைக்கும் சென்றது; தூத்துக்குடிக்கும் சென்றது. நாவலர் பாரதியார் சென்னைக்கு விரைந்தார்; ஆங்கில அதிகாரிகள் சிலரைக் கண்டார்; பாரதியாரின் விடுதலைக்கு முயன்றார். அதே பொழுதில் அப்பொழுது 'சுதேசமித்திரன்' ஆசிரியராகப் பணியாற்றிய அரங்கசாமி ஐயங்கார் கடலூர்க்கு விரைந்து, தமக்குத் தெரிந்த வழக்கறிஞர் சிலரை யழைத்துக்கொண்டு, கடலூர் அறமன்றத் தலைவரிடம் சென்று பாரதியாரை விடுதலை செய்யுமாறு வேண்டினர். அறமன்றத் தலைவரோ சென்னைக் காவல்துறையினரை அணுகுமாறு கூறினர். அரங்கசாமி ஐயங்கார் சென்னைக்கு விரைந்து சென்றார். அதற்குள் நாவலரின் முயற்சி பலன் தந்தது. அரங்கசாமி ஐயங்கார் காவல் துறைத் தலைமை அதிகாரியை அணுகிப் பாரதியார் உடல்நலக் குறைவுடையவர் என்றும், உடனடியாகச் சென்னைச் சிறைச்சாலைக்கு மாற்ற வேண்டும்

என்றும் வேண்டினர். இறுதியில் நாவலரின் முயற்சியாலும், அரங்கசாமி ஐயங்காரின் முயற்சியாலும், காவல்துறைத் தலைமை அதிகாரி கானிங்டன் துரையின் நல்லெண்ணத்தாலும் சிறைசெய்யப்பட்ட இருபத்துநான்காம் நாள் பாரதியார் விடுதலைபெற்றார்.

### கடையத்தில் பாரதியார்

பாரதியார் கடலூர்ச் சிறையிலிருந்து விடுதலையானதும், நேராகத் தம் மனைவி பிறந்த ஊராகிய கடையம் சென்றார். பாரதியாரால் அங்கு இரு நாள்கள்கூட இருக்க இயலவில்லை. இவருடைய பழக்கவழக்கங்களும் போக்கும் இவர் தம் உறவினர்களுக்குப் பிடிக்காமையே இதற்குக் காரணம்.

### எட்டயபுரத்தில் பாரதியார்

பின்னர்ப் பாரதியார் தம் குடும்பத்தை அழைத்துக்கொண்டு தம்மூராகிய எட்டயபுரம் சேர்ந்தார். அங்குக் கையிலிருந்த பொருளைக் கொண்டு வாழ்ந்து வரலானார். அவ்வப்பொழுது கவிதைகள் எழுதிச் 'சுதேசமித்திரன்' நாளிதழுக்கு அனுப்பிவைப்பார். அங்கிருந்தும் சிறிது பணம் வரும். இவ்வாறு எட்டயபுரத்தில் சிறிது காலமே அவரால் வாழ முடிந்தது. வறுமையும் அவர் வாழ்வில் வளர்ந்தது. உடல்நலமும் குறையத் தொடங்கியது.

### மீண்டும் சென்னை வாழ்வு

இந் நிலையில் ஒருநாள் சென்னைச் 'சுதேசமித்திரன்' அலுவலகத்திலிருந்து அஞ்சல் ஒன்று வந்தது.

அவ்விதழின் துணையாசிரியர் பொறுப்பைப் பாரதியார் ஏற்றுக்கொள்ளுமாறு அவ்வஞ்சலில் தெரிவிக்கப்பட்டிருந்தது பாரதியார் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள இசைந்து நண்பர்களிடமும், மற்றவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு தம் குடும்பத்தினருடன் சென்னையில் குடிபுகுந்தார்; 'சுதேசமித்திரன்' துணையாசிரியர் பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றிவந்தார்.

யானை தந்த துயரம்

சென்னையில் பாரதியார் வாழ்ந்துவந்த பகுதி திருவல்லிக்கேணியாகும். அங்குள்ள பார்த்தசாரதி கோவிலுக்குப் பாரதியார் சென்று வருதல் வழக்கம். அங்குள்ள யானைக்குப் பழமும், தேங்காய் மூடியும் கொடுப்பதைப் பாரதியார் வழக்கமாகக் கொண்டிருந்தார். யானை அதனை வாங்கியுண்ணும். பாரதியார் அதனைக் கண்டு மகிழ்வார். 'கொத்தித் திரியும் கோழி,' 'எத்தித் திருடும் காக்கை,' 'பாலைப் பொழிந்து தரும் பசு,' 'வாலைக் குழைத்து வரும் நாய்'—போன்ற உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் என்று பாடியவரல்லரோ பாரதியார்! அவர் யானையினிடம் அன்பு காட்டியதில் வியப்பேது?

ஒருநாள் அவ் யானைக்கு மதம் பிடித்து விட்டது. அதனைப் பாரதியார் அறியார்; வழக்கம் போல் தேங்காய், பழம் கொடுத்தார். யானை அவற்றை வாங்கிக் கொள்ளாமல் அவரையே தூக்கி எறிந்தது. தூக்கி எறியப்பட்ட பாரதியார் யானையின் கால்களுக்கு இடையே வீழ்ந்தார்.

வீழ்ந்தவரை யானை அடையாளம் கண்டு கொண்டது போலும்; கண்ணீர் வடித்தது; ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றது. வீழ்ந்த பாரதியார் மயக்கமுற்ருர். அருகிருந்தோர் யாரும் அவர்பால் நெருங்கவில்லை. எப்பொழுதும் பாரதியார்க்கு உதவும் குவளைக் கண்ணன் அப்பொழுது அங்கே ஓடிவந்தார்; துணிவுடன் யானையின் கால்களுக்கிடையே புகுந்து ஒரு குழந்தையைத் தூக்கி வருவதுபோலப் பாரதியாரைத் தூக்கி வந்தார். மருத்துவ உதவிக்குப் பின் பாரதியார் ஓரளவு குணமானர்.

பாரதியார் சிறிது குணமடைந்தாலும் தூக்கி எறியப்பட்டு வீழ்ந்த அதிர்ச்சியினுல் அவர்க்கு வயிற்றுக் கடுப்பு நோய் வந்துற்றது. மருத்துவம் பார்த்தும் பயனில்லை. 11-9-1921 இல் பாரதியார் உயிர் நீத்தார்.

தனது ஆற்றலும் இனிமையும் நிறைந்த குரலால் விடுதலைப் பண்ணிசைத்த வீரக்குயில் இம் மண்ணைவிட்டே விடுதலை பெற்றுவிட்டது. குயிலின் குரல் ஒடுங்கிவிட்டாலும் அக் குரலிலிருந்து எழுந்த பாடல்களின் கருத்து ஒன்ருய், இரண்டாய், நூருய் வளர்ந்து மக்கள் உண்மையான விடுதலை பெறத் துணைசெய்யும் என்பதில் ஐயமில்லை.

# 4. புரட்சிக்குயில் பாரதிதாசன்

(கி. பி. 1891 — 1964)

' தமிழுக்கும் அமுதென்று பேர் !—அந்தத்
தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் !'

இந்த அமுதப் பாடலைக் கேளாச் செவிகளே இல்லை என்று துணிந்து கூறலாம். பாடிப்பாடிச் சுவை காணும் வாய்கள்தாம் எத்தனை ! எத்தனை !

' எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு

என்னும் வெற்றிச் சங்கின் வீரமுழக்கத்தையும் மேடைதோறும் கேட்டுக்கேட்டு, உணர்ச்சியும் எழுச்சியும் கொண்ட நெஞ்சங்களைத்தாம் கணக்கிட்டுச் சொல்லமுடியுமா ?

பாடல்கள் நன்றாகத் தெரியும் ; ஆனால் அந்தப் பாடல்களைத் தந்த மாபெருங் கவிஞர் யார் ? எத்தனை மாணவர் அறிவர் ?

இன்று தமிழ் நாடெங்கணும் பாட்டரங்கங்கள் சிறந்த முறையில் நிகழ்ந்துவருவதை, நாமெல்லாம் கண்டு களிக்கின்றோம். அந்த அரங்கங்களில் பாமழை பொழிகின்ற பாவலரின் எண்ணிக்கையை அளவிட்டுச் சொல்ல முடியாது. அந்தப் பாவலர்களுக்குப் பாட்டு வெறி ஊட்டியவர் யார் ? ஒரு பெரும் பாவலர் பரம்பரையே உருவாவதற்குக் காரணராக — வழிகாட்டியாக நின்ற பாவலர் யார் ? அவர்தாம் பாவேந்தர் பாரதிதாசன்

தமிழர் நம் நெஞ்சமெல்லாம் தளிர்த்து வளரத் தமிழமுதம் வார்த்து, தமக்கென ஒரு பரம்பரையைத் தோற்றுவித்து, எழுச்சிப் படைவீரர்களாக ஆக்கிவிட்ட இப் பெரும் பேராசானை இளைய பாரதம் அறியாமல் இருக்கலாமா? பாவலர் பரம்பரை தோன்றவேண்டும் என்று கனவு கண்டவர் விடுதலைக் குயிலாகிய சுப்பிரமணிய பாரதியார். அக் கனவை நனவாக்கிய பெருமை பாட்டுலகத் தந்தை பாரதிதாசனையே சாரும்.

## அ. கனக சுப்புரத்தினம்

### இளமையும் கல்வியும்

கிழக்குக் கடற்கரையோரத்திலே, புதுச்சேரி என்னும் ஓர் அழகிய நகரம் இருக்கிறது. அந் நகரில், கனகசபை என்பவர் பெரும் வணிகராக விளங்கி வந்தார். மகாலட்சுமிஅம்மையார் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக வாய்க்கப்பெற்றார். கி. பி. 1891 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29ஆம் நாள், இவர்களுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. இவர்கள் சீரும் சிறப்புமாய் அம் மகவை வளர்த்து வந்தனர். அக் குழந்தைக்குச் சுப்புரத்தினம் என்னும் பெயரிட்டுத் தக்க பருவத்தில் பள்ளியில் சேர்த்தனர். சுப்புரத்தினம் இளமையிலேயே பாடலில் நாட்டம் உடையவராக இருந்தார்; இயற்கை யழகுகளைக் கண்டு மகிழ்வதில் பெருவிருப்பங் காட்டினார்; சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் உடையவராகத் தோன்றினார்.

அக்காலத்தில் புதுச்சேரி பிரஞ்சுக்காரர்களின் ஆட்சியில் இருந்துவந்தது. அதனால் பள்ளிகளில் பிரஞ்சு மொழியே முதன்மையும், உரிமையும் பெற்றிருந்தது. அம் மொழியை நன்கு கற்றுவந்த சுப்புரத்தினத்திற்கு இயற்கையிலே தமிழார்வம் இருந்தது; மேலும், இசையிலும் நாடகத்திலும் பற்று மிகுந்திருந்தது. அதனால் தமிழ்க் கல்வி நன்கு கற்க வேண்டும் என்னும் எண்ணம் இவருள்ளத்தில் மேலோங்கி நின்றது. தம் மகனுடைய எண்ணத்தை அறிந்துகொண்ட தந்தையார் அதற்குத் தக்க ஏற்பாடு செய்தார்.

சுப்புரத்தினம் பள்ளிப் படிப்புடன் தமிழ்க் கல்வியும் பயின்றுவந்தார். இவருக்குத் தமிழ் கற்பிக்கும் பொறுப்பை ஏற்ற முதல் ஆசிரியர் பு. ஆ. பெரியசாமிப் புலவர் என்ற தமிழ்ப் பேரறிஞர் ஆவார். சுப்புரத்தினம் தமிழில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தமையால், தமிழ்க் கல்வி நாளுக்குநாள் வளர்ந்துவந்தது. அடுத்து, இவர் புலவர் சி. பங்காரு என்பவரிடமும் தமிழ்க் கல்வியைக் கற்றுவந்தார்.

புலவர் பங்காரு ஆசிரியரிடம் சுப்புரத்தினமும் வேறு மாணவர் சிலரும் தமிழ் பயிலச் சென்ற பொழுது, 'நப்போல் வளே' என்னும் ஆத்திசூடிப் பாட்டுக்குப் பொருள் கூறுமாறு ஆசிரியர் கேட்டார். வந்த மாணவருள் சுப்புரத்தினமே சரியான பொருள் கூறினார். அதனால் ஆசிரியர்க்குச் சுப்புரத்தினத்திடம் தனி அன்பு உண்டாகியது.

இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலியவற்றை அவர் நன்முறையில் கற்பித்தார். அவற்றைச் செம்மையாகக் கற்றுவந்த சுப்புரத்தினம், கி.பி. 1908ஆம் ஆண்டு, கல்வே கல்லூரியில் தமிழ்த் தேர்வு எழுதினார்; புலவர் வகுப்புத் தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். தந்தையார் பெயருடன் சேர்த்துக் கனக சுப்புரத்தினமாக இருந்த இவர் புலவர் சுப்புரத்தினமாக விளங்கினார்.

**தொழிலும் மணமும்**

புலவர் சுப்புரத்தினம், காரைக்காலுக்குப் பக்கத்தில் இருக்கும் 'நிரவி' என்னும் ஊரிலுள்ள அரசினர் பள்ளியில், தமிழாசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார். அப்போது இவருக்கு மாத ஊதியம் முப்பது வெண்பொற்காசுகள். நிரவியில் பணியாற்றிக்கொண்டிருந்தபொழுது, இவர் புதுச்சேரிக் கல்வே கல்லூரிக்குத் தமிழ்ப் பேராசிரியராக மாற்றம் பெற்றார்.

புலவர் சுப்புரத்தினம் நிரவியிலும் புதுச்சேரியிலும் ஆசிரியப் பணியை மேற்கொண்டிருந்த காலத்தில், அழகிய சுவை மிக்க பாடல்கள் பலவற்றைப் பாடிவந்தார்; கடவுள் அன்பு, நாட்டுப் பற்று, ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ மனப்பான்மை இவற்றை அடிப்படையாகக்கொண்ட பாடல்களை அப்பொழுது எழுதிவந்தார். 'சுப்பிரமணியர் துதியமுது' 'கதர்ப்பாட்டு', 'சமத்துவப் பாட்டு' முதலியன அக் காலத்தில் இவர் எழுதியவையே. சுப்பிரமணியர் துதியமுதிலிருந்து சில பாடல்களை

இவரே தம் வாயால் இனிமையாகச் சில சமயங்களில் பாடிக் காட்டுவார்.

தந்தையார் கனகசபை, சுப்புரத்தினத்துக்குத் திருமணம் செய்துவைக்க எண்ணினார்; தக்க இடத்தில் பெண் பார்த்தார். பரதேசி-காமாட்சி என்பவர்க்குத் திருமகளாகத் தோன்றிய பழநியம்மாளே அந்தப் பெண். முறைப்படி திருமணம் நடந்தது. இல்லற வாழ்க்கையில் ஈடுபட்ட பழநியம்மாள், அன்பும் பண்பும் பொருந்தப் பொறுப்புடன், குடும்பத்தை நடத்திவந்தார். பாவலர் உள்ளம் குழந்தையுள்ளம் போன்றது. அந்த உள்ளத்திற்கேற்றவாறு, பழநியம்மாள் குறிப்பறிந்து ஒழுகிவந்தார். பாவலரும் தம் துணைவியாரிடம் அன்பும் பரிவும் காட்டினார். எனினும், சில வேளைகளில், பாவலர் தமக்குள்ள இயற்கைக் குணத்தால் துணைவியார்க்கு மாறாக நடந்து கொள்வார். அப்பொழுதும் அந்த அம்மையார் மனம் வருந்தாது, கணவர்க்கு வேண்டிய பணிகள் செய்துவந்தார்; அத் தொண்டிலே இன்பமுங் கண்டுவந்தார். இத் தம்பதியர்க்கு மக்கட் செல்வமும் மனமகிழ வாய்த்துள்ளது.

## ஆ. பாரதிதாசன்

### பாரதியார் தொடர்பு

தமிழ்நாடு பகுதி பகுதியாக ஆங்கிலேயரிடமும் பிரஞ்சுக்காரரிடமும் அடிமைப்பட்டுக் கிடந்ததைக்

கண்டு சுப்புரத்தினம் மனம் வருந்தினார்; தமிழர் தம்மை நினையாது, தாய்மொழியையும் கருதாது, உண்ணுதலும் உறங்குதலும் அன்றி வேறொன்றும் அறியாது, உரிமையுணர்வு அற்றுக்கிடக்கும் நிலையைக் கண்டு நைந்துநைந்து உருகுவார். பாவலர்கள் உணர்ச்சி வயப்பட்டால், அவ்வுணர்ச்சி பாடலாகத் தானே வெளிப்படும்! இப்படி இவர் அடிக்கடி எழுதிய பாடல்களைப் பிறருக்குப் பாடிக்காட்டுவார்.

இச் சமயத்தில் சுப்பிரமணிய பாரதியார் புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார். ஆங்கிலேயர் பிடியினின்றும் நாடு விடுதலை பெறவேண்டும் என்று கருதிய பாரதியார், தம் பாட்டுத் திறத்தாலே வையத்தை விழிப்படையச் செய்துகொண்டிருந்தார். இவருடைய பாடல்களைக் கேட்டு, நாட்டு மக்கள் உள்ளங்களிலே, விடுதலை வேட்கை கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. ஆங்கிலேயரின் அடக்குமுறை தாளமாட்டாமல், பாரதியார் புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்தார்.

ஒருநாள் நண்பர் ஒருவரின் இல்லத்தில் திருமணம் நிகழ்ந்தது. திருமணத்திற்குப் பாரதியாரும் வந்திருந்தார். சுப்புரத்தினமும் வந்திருந்தார். பாரதியார் வந்திருப்பது சுப்புரத்தினத்திற்குத் தெரியாது. திருமணத்தில் விருந்துக்குப் பிறகு நண்பர்கள் உரையாடிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சுப்புரத்தினம், பாரதியாரின் நாட்டுப் பாடல் ஒன்றை இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தார். இதனைக் கேட்ட பாரதியார் மனமகிழ்ந்தார்;

சுப்புரத்தினத்தைப்பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார். பாரதியார் அங்கு வந்திருப்பதை அறிந்த சுப்புரத்தினம் நேரிற் சென்று அவரைக் கண்டார். அன்றே பாரதியாருக்கு இவர்மீது ஒரு நல்லெண்ணம் உண்டாகிவிட்டது. அன்று முதல் இருவருக்கும் தொடர்பு ஏற்பட்டது.

**பாரதியாரின் பாராட்டு**

நாளுக்குநாள் அத் தொடர்பு வளர்ந்துவந்தது. ஒருநாள் நண்பர் சிலருடன் பாரதியார் உரையாடிக்கொண்டிருந்தார்: அப்பொழுது சுப்புரத்தினமும் அங்கிருந்தார். நண்பர்களிடத்தில் சுப்புரத்தினத்தைப் பற்றிப் பாரதியார் கூறினார். 'சுப்புரத்தினம் பாடல்கள் எழுத வல்லவன்' என்று வியந்து கூறி, ஒரு பாட்டும் எழுதப் பணித்தார். உடனே சுப்புரத்தினம்,

'எங்கெங்குக் காணினும் சக்தியடா!—தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா !'

என்று தொடங்கும் பாடலைப் பாடிக் காட்டினார். பாடலைக் கேட்டவர்கள் வியப்பில் ஆழ்ந்தனர். சுப்புரத்தினத்தின் பாட்டுத் திறத்தையும், எழுச்சி மனப்பான்மையையும் அறிந்துகொண்ட பாரதியார் இவரைத் தமக்கு உற்ற நண்பராக ஏற்றுக் கொண்டார். இந்தப் பாடலைப் பாரதியாரே 'சுதேசமித்திரன்' இதழுக்கு அனுப்பி வைத்தார்; அனுப்பியபோது, 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது' என்று தாமே அதில் எழுதி அனுப்பினார்.

பாரதியாரால், 'பாவலர்' என்று பாராட்டப்பெற்ற சிறப்பை இவர் ஒருவரே பெற்ருர். இவ்வாறு பத்து ஆண்டுகளாகப் பாரதியாருடன் சுப்புரத்தினம் நெருங்கிப் பழகிவந்தார். அதனுல் இவர் அவரைப் பற்றி நன்கு உணர்ந்துகொள்ள முடிந்தது.

**பாரதிதாசன்**

இருவரும் பழகிவந்தபோது, தம்மிடம் பாரதியார் சங்க இலக்கியங்களைப்பற்றித் தெரிந்துகொண்டதாக இவர் கூறியிருக்கிருர். பாரதியாருடைய நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சாதி பேத மற்ற சமத்துவ மனப்பான்மை, வீர உணர்வு, பாட்டுத் திறம் இவற்றைக் கண்டு, சுப்புரத்தினம் அவரிடம் அளவுகடந்த ஈடுபாடு கொண்டார்; அந்த ஈடுபாட்டால் தமது பழைய கருத்தை—பழைய நடையை மாற்றிக்கொண்டு புதிய கருத்து, புதிய நடை என்று பாடத் தொடங்கிஞர். எளிய நடையில், இனிய தமிழைப் புதிய பாங்கில் பாடுதற்கு வழிகாட்டியாகப் பாரதியார் விளங்கினமையால் சுப்புரத்தினம், 'பாரதிதாசன்' என்று தமது பெயரையும் மாற்றி அமைத்துக்கொண்டார். பாரதியார் தமக்கு வழிகாட்டியாக விளங்கியதைப் பாரதிதாசனே,

'பாடலில் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிர மணிய பாரதி தோன்றிஎன்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டிஞர்'

என்று பாடியுள்ளார்.

அந் நாளில் பாரதியாரைப்பற்றி எழுதிய ஒருவர், 'அவர் உலக கவி அல்லர்' என்று குறிப்பிட்டிருந்தார். அப்போது பாரதிதாசன் வெகுண்டெழுந்து, 'பாரதியார் உலக கவியே' என்று மறுப்பு ஒன்றினை எழுதினரென்பதிலிருந்து, பாரதியாரிடம் இவர் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார் என்பது தெரியும். பாரதிதாசனுடன் நெருங்கி உரையாடிப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும் அந்த மதிப்பு.

## இ. புரட்சிக் குயில்

சுப்புரத்தினம் பாரதிதாசனாக மாறிய பிறகு, இவருடைய எண்ணத்தில் புரட்சி; சொல்லில் புரட்சி; எழுத்தில் புரட்சி; செயலில் புரட்சி; சுருங்கக் கூறின் இவர் தோற்றமே புரட்சி.

### பகுத்தறிவுப் பாவலர்

பாரதியாருடைய தொடர்பு பாரதிதாசனுக்கு ஒரு திருப்புமையமாக இருந்தது. அந்தச் சமயத்தில் பகுத்தறிவு இயக்கம் தமிழ்நாடெங்கணும் பரவிக் கொண்டிருந்தது. பாரதியாரால் எழுச்சி பெற்றிருந்த பாரதிதாசன் உள்ளத்தில், பகுத்தறிவுக் கருத்துகள் ஆழப் பதிந்து, முளைத்துச் செழித்து, வளர்ந்து, புரட்சிப் பாடல்களாக மணம் வீசத் தொடங்கின. சமுதாயத்திலே நிலவி வந்த குருட்டு நம்பிக்கைகளை இவர் தாக்கினர்; மூடப் பழக்க வழக்கங்களைக் கடிந்து பாடினர். கண்மூடி வழக்கங்களைச் சாடும் இவர் பாடல்களில் புயலின் வேகத்தைத்தான் காணமுடிந்தது.

பகுத்தறிவுப் பாவலராக மாறிய பாரதிதாச னின் பாடல்கள் அரசியல், பொருளியல், சமுதாயம் மூன்றிலும் பெரும் புரட்சியை உண்டுபண்ணக் கூடியவைகளாக இருந்தன. அவர் நெஞ்சத்தி லிருந்து வெளிக்கிளம்பிய பாடல்கள், எரிமலையி லிருந்து வெளிவரும் தீப்பொறிகளாகவே காணப் பட்டன. இடையிடையே வரும் கேலியும் கிண்ட லும், அப் பொறிகளின் வெம்மையைச் சற்றே தணி வித்து இளஞ்சூடாக்கிவிடும்.

**சமுதாய வழிகாட்டி**

சமுதாயத்தில் மண்டிக்கிடந்த பல கொடுமை களை இவர் கடிந்து பாடியதைப்போல் பிறர் பாட வில்லை என்றே கூறலாம். சாதிக்கொடுமைகளையும் போலிச் சமயக்கொள்கைகளையும் தகர்த்தெறியும் வெடிகுண்டுகளாகவே இவர் பாடல்கள் வெடித் தன. நம் நாட்டுப் பெண்கள் நிலையைப்பற்றிப் பாடிய பாடல்களில் காணப்படும் புரட்சிக் கருத்து களைப்போலப் பிறர் பாடல்களில் காணல் அரிது. குழந்தை மணத்தைக் கண்டு இவர் பொருமினார்; வயதுப் பொருத்தமின்றி நடைபெறும் திருமணங் களைக் கண்டு திடுக்கிட்டார்; விதவை என்னும் பெயரால் இளம் பெண்கள் படும் இன்னல்களைக் கண்டு இரங்கினார். குமுறி எழுந்தது பாரதிதாசன் நெஞ்சம். மாதர் மறுமணத்தை இவர் வற்புறுத்திப் பாடினார்.

இவர் தாம் பிறந்த தமிழ்நாட்டை, தென்னாட் டைக் கண்டுகண்டு மனங்கலங்கினார். மக்கள் அரசி

யவில் அக்கறை காட்டாமல், சமுதாயச் சீர்கேடு களைச் சிந்தை செய்யாமல், அறிவை வளர்க்க ஆர்வம் இல்லாமல், மூடநம்பிக்கைகளுக்கு ஆட்பட் டுச் சீரழிகின்றனரே என்று எண்ணிஎண்ணி ஏங்கினார். அந்த ஏக்கத்தை,

'தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்
செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்!'

என வரும் இவர் பாடல் அடிகளிலே காணலாம்

சோம்பிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பி, அவர்கள் எழுச்சிகொள்ளுமாறு இவர் பல பாடல் களைப் பாடினார். அவை விசையொடுங்கிய தேகத்தில் வலிமை ஊட்டி, வீரமூட்டத்தக்கனவாக இருந்தன; எழுச்சியையும் உணர்ச்சியையும் உண்டாக்கும் வண்ணம் அமைந்தன. அப் பாடல் களைக் கேட்டு மக்கள் விழித்தெழுந்தனர்; வீறு கொண்டு நின்றனர்; உலகை நிமிர்ந்து நோக்கினர்.

**புரட்சிக் கவிஞர்**

அடிமை மனப்பான்மையில், தாழ்வு மனப் பான்மையில் ஊறிக்கிடந்து, நம்மால் என்ன ஆகும் என்று தன்னம்பிக்கையிழந்து தவித்த மனிதனை நோக்கி, அவனுக்கு எழுச்சியூட்டக் கருதி,

'மனிதரில் நீயும்ஓர் மனிதன்; மண்ணன்று;
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்;
தோளை உயர்த்து; சுடர்முகம் தூக்கு;
மீசையை முறுக்கி மேலே ஏற்று'

என்று பாடினார்; அப்பொழுதும் மக்கள் விழிப்புற்று எழும் நிலையைப் பெறாதிருந்ததைக் கண்டார்;

“இனி இவர்களிடம் சொல்லிப் பயனில்லை; இளைஞர் கூட்டத்துக்குத்தான் உணர்ச்சியை உண்டாக்க வேண்டும்; பழமையில் ஊறிப்போன நெஞ்சங்கள் திருந்தப்போவதில்லை’ என்று எண்ணினார்; அதனால், இளைஞர் கூட்டத்துக்கு வீரமுரசங் கொட்டினார்.

‘பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது சிறுத்தையே வெளியில் வா
..........................................................
சிம்புட் பறவையே சிறகை விரி; எழு;
சிங்க இளைஞனே திருப்பு முகம்; திற விழி’

என்று எழுச்சிக் குரல் கொடுத்தார்.

நாடெங்கும் இளைஞர் படை திரண்டெழுந்தது. எங்கும் உணர்ச்சி! எங்கும் எழுச்சி! இவ்வாறு தமிழகமெங்கும் உணர்ச்சியும் எழுச்சியும் உண்டாகப் புரட்சிக் கருத்துகளைப் பாடி வந்தமையால் மக்கள், பாரதிதாசனைப் ‘புரட்சிக் கவிஞர்’ என்று வழங்கத் தொடங்கினர். எல்லாருடைய நெஞ்சங்களிலும் புரட்சிக் கருத்துகள் அரும்பு விட்டன. புரட்சிக் கவிஞரின் புகழும் மணக்கத் தொடங்கியது.

**மக்கள் பாராட்டு**

தமக்கு விழிப்புணர்வூட்டிய புரட்சிக் கவிஞரைப் பாராட்டவும் நன்றி செலுத்தவும் கருதித் தமிழக மக்கள் திரண்டெழுந்தனர்; பெருநிதி திரட்டித் தருவதென்றும் முடிவு செய்தனர். ‘அறிஞர்’ என்று அனைவராலும் அழைக்கப்பட்டவரும், தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் திகழ்ந்து

மறைந்தவரும் ஆகிய மாமேதை அண்ணு அவர்களே முன்னின்று நிதி திரட்டினுர்; தமது பேச்சாலும் எழுத்தாலும் இருபத்தையாயிரம் ரூபாய் திரட்டினுர். 1946ஆம் ஆண்டு, சென்னே மாநகரில், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடந்தது. வெள்ளம்போல் தமிழர் கூட்டம் திரண்டு வந்தது. சொல்லின் செல்வர், பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளே, வீரத் தமிழர் ப. ஜீவானந்தம் போன்ற பெருமக்கள் பலர் பாராட்டிப் பேசினர். சுருங்கக் கூறின், பிற்காலத்தில் அடையவேண்டிய சிறப்பு, பெருமை, புகழ் அனைத்தையும் தம் வாழ்நாளிலேயே புரட்சிக் கவிஞர் பெற்றுவிட்டார் என்னலாம்.

**புரட்சிக் குயில்**

புரட்சிக் கருத்துகளே மக்களிடையே பரப்ப எண்ணிய காரணத்தாலும், அவற்றை எழுத வேண்டிய பணி மிகுதியாக இருந்ததாலும் புரட்சிக் கவிஞர், 1946 ஆம் ஆண்டு தமது ஆசிரியப் பணியிலிருந்து விலகிக்கொண்டார்; அதன் பின்னர், 1948இல் 'குயில்' என்னும் திங்கள் இதழைத் தாமே தொடங்கி நடத்திவந்தார். இதழ் முழுவதும் பாடல்களாகவே இருக்கும்; புரட்சிக் கருத்துகளேயே தாங்கிவரும். முதன்முதல் முழுதும் பாடல்களாகவே வெளிவந்த இதழ், இந்தப் புரட்சிக் குயில்தான்.

## ௯. பாவேந்தர்

### விருத்தப்பாவலர்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், வெண்பா, ஆசிரியப்பா முதலான எல்லாவகைப் பாக்களையும் பாட வல்லவர்; ஆயினும், விருத்தப்பா என்னும் பாடல் எழுதுவதில் ஆற்றல்மிக்கவராக விளங்கினர். வெண்பாப் பாடுவதில் புகழேந்திப் புலவர் எவ்வாறு வல்லவராக விளங்கினரோ, அவ்வாறே விருத்தம் பாடுவதில் கம்பர் முன்பு வல்லவராக விளங்கினர். கம்பருக்குப் பிறகு, விருத்தப்பாவிற்குப் புத்துயிரும் பெருமதிப்பும் உண்டாகச் செய்தவர்களுள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் ஒருவர்.

புரட்சிக் கவிஞர் கவிதை நூல்கள், உரைநடை நூல்கள், நாடக நூல்கள் எனப் பலப்பல எழுதித் தந்துள்ளார். கம்பருடைய கவித்திறனையும் கவிச் சிறப்பையும் கண்டு வியந்தவர்கள், அவரைக் 'கவிச் சக்கரவர்த்தி' என்று வழங்கினர். அதைப்போலவே புரட்சிக் கவிஞருடைய பாட்டு வன்மையையும் பாடற் சிறப்பையும் உணர்ந்த மக்கள், இவரைப் 'பாவேந்தர்' என்று வழங்கத் தொடங்கினர். புரட்சிக் கவிஞர் பாவேந்தரானர்.

### படைப்புகள்

பாவேந்தர் நமக்குப் படைத்தளித்த நூல்கள் பல. அவற்றுள் பாரதிதாசன் கவிதைகள், குடும்ப விளக்கு, தமிழியக்கம், அழகின் சிரிப்பு, இசையமுது, பாண்டியன் பரிசு ஆகிய நூல்கள் மிகச் சிறந்தன வாகும்.

**பாரதிதாசன் கவிதைகள்** என்னும் நூல் பல் வேறு சமயங்களில் பாடப்பட்ட பாடல்களின் தொகுதி. இந்த நூலே, பாரதிதாசன் ஒரு பெருங் கவிஞர் என்பதைத் தமிழ்நாட்டிற்கு உணர்த் திற்று. இவருடைய பாடல்கள் மேலும் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

**குடும்ப விளக்கு** என்பது ஒவ்வொரு குடும் பத்துக்கும் விளக்குப்போன்ற நூல். 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்னுங் கருத்தை அடிப்படை யாக வைத்து எழுதப்பட்ட நூல் இது. குடும்பம் எப்படி நடத்தவேண்டும் என்று, குடும்பத்தில் ஈடுபட்டவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் ஓர் ஆசான் போன்றது இந்த நூல். ஒவ்வொருவரும் தவறுமல் படித்துணரவேண்டிய நூல். பாரதி தாசன் படைப்புகளுள் இது புதுமையான படைப் பாகும்; தனித் தன்மை வாய்ந்ததும் ஆகும்.

**தமிழியக்கம்** தமிழ்நாட்டில் தமிழ்மொழி எந் தெந்தத் துறைகளில் ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறது, எங்கெங்கு நம் மொழி தலைமை பெறவேண்டும், தமிழ் தலைமை பெற யார்யார் என்னென்ன பணி களில் ஈடுபடவேண்டும் என்றெல்லாம் எடுத்துச் சொல்லி, ஓர் இயக்கம்போல நின்று வழிகாட்டும் ஒப்பற்ற நூல் இது. தமிழ்நாட்டு இளைஞர் ஒவ் வொருவரும் இதனைப் படித்து உணர்ந்து, நெஞ்சில் பதியவைத்து, அஃது எடுத்துக் கூறும் நெறிமுறை களைச் செயற்படுத்தினுல், தமிழ்மொழி தனக்குரிய நிலையையும் மேன்மையையும் அடைந்தே தீரும்.

அழகின் சிரிப்பு என்னும் நூல் பாரதிதாசன் உலகப் பெருங் கவிஞர் என்பதை உலகிற்கு உணர்த்தும். கிளி, புறு, கடல், ஆறு, ஆலமரம் முதலான தலைப்புகளில், இயற்கைப் பொருள்களைப் பற்றி இவர் இந் நூலில் அழகாகப் பாடியிருக்கிறார். பாவலர்களுடைய கண்களுக்கு ஒரு தனி ஆற்றல் உண்டு. எப்பொருளையும் ஊடுருவிச் சென்று காணும் ஆற்றல்தான் அது. அதனால் நமக்குப் புலனாகாது மறைந்துகிடக்கும் அழகுகள், அவர்களுடைய விழிகளுக்குப் புலனாகும். அவ்வாறு புலனாகும் அழகுகளை அவர்கள் கண்டு தாமும் சுவைத்து, நம்மையும் சுவைக்கவைத்து மகிழச் செய்வார்கள். பாரதிதாசன் இவ்வாறு சுவைத்து எழுதிய 'அழகின் சிரிப்பு' நம்மையும் இயற்கையழகிலே தோயவைக்கின்றது.

இசையமுது என்னும் இப் பெயரைக் கேட்டவுடனே, இந் நூலின் இனிமை நமக்குப் புலப்படுகின்றது. இசையே இனிமையானது; அதுவும் அமுதாகப் பொழிந்துவிட்டால் இனிமைக்குக் குறைவேது? 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்று பாரதிதாசன் பாடினார். அவருடைய இசைப் பாட்டுக்கும் அமுதென்று பேர் என்று நாம் பாடலாம். அவ்வளவு இனிமையான இசைப் பாடல்கள் இந்த நூலுக்குள் அமைந்திருக்கின்றன. இவர் புரட்சிக் கவிஞராதலின், மாடு மேய்ப்போன், வண்டி ஓட்டுபவன், ஆலைத் தொழிலாளி, கூடை முறம் பின்னுவோர் என்று இத்தகைய மக்களையே 'இசை

யமுதில்' பாடியிருக்கின்றார். இவருடைய பாடல்கள் பல திரைப்படங்களிலே முழங்கிவருகின்றன.

**பாண்டியன் பரிசு** என்பது முழுதும் விருத்தப் பாக்களால் ஆன சிறந்த காப்பிய நூல். இக் காப்பியத்தில் வீரம், நகை முதலிய சுவைகள் நிறைந்திருக்கும்; நிலையாமையைப்பற்றிச் சொல்லும் பகுதி சிறப்பாக இருக்கும்; மூடநம்பிக்கைகளை அழகாக நகைச்சுவையுடன் எடுத்துக்கூறும் பகுதியைப் படித்துப்படித்து மகிழலாம்.

இவை தவிர வேறு காப்பியங்கள், நாடகங்கள், பாடல்கள், உரைநடை நூல்கள் முதலியவற்றையும் பாரதிதாசன் எழுதியுள்ளார். இவ்வாறு உயர்ந்த நூல்களை எழுதித் தமிழ்மொழிக் காவலராய்ப் பாட்டுலகில் முடிசூடா மன்னராய் விளங்கி வந்த பாரதிதாசனை, மக்கள் 'பாவேந்தர்' என்னும் பெயரிட்டழைக்காமல், வேறு எப்பெயரால் அழைப்பர்?

## உ. உளப்பாங்கு

### குழந்தை நெஞ்சம்

பாவேந்தர் பாரதிதாசன் ஒரு பிறவிக் கவிஞர். அவருடன் பழகியவர் இதனை நன்கு அறிவர். இவர் பிறவிக் கவிஞராக இருந்தமையால், குழந்தை உள்ளம் படைத்தவராக விளங்கினார். உலகியலுக்கும் இவருக்கும் நீண்ட இடைவெளியிருக்கும். யார் எதைச் சொன்னாலும் இவர்

நம்பிவிடுவார். யார் உண்மையானவர், யார் பொய்ம்மையானவர் என்பதே இவருக்குத் தெரியாது. எளிதில் யாரையும் நம்பும் இயல்புடையவராக இருந்தமையால், பொய்ம்மையானவரையும் இவர் நம்பிவிடுவார். நம்பிவிட்டால், அவர்களை 'நம்ம பிள்ளை' என்று உரிமையுடனே குறிப்பிடுவார். கவிஞர்கள் எப்பொழுதும் கற்பனை உலகில் பறந்துகொண்டேயிருப்பவர்கள். அதனால் இந்த உலக நடவடிக்கைகளுக்கும் அவர்களுக்கும் தொடர்பு காண்பது அரிது.

### பணிவுள்ளம்

'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்பது வள்ளுவர் வாய்மொழி. இவ் வாய்மொழியை நன்கு உணர்ந்தவர் பாவேந்தர். அதனால் எல்லாரிடத்தும் பணிவு காட்டும் பண்பு இவரிடம் குடிகொண்டிருந்தது. தமக்கு வழிகாட்டியாக இருந்த பாரதியாரிடம் இவர் பெருமதிப்பு வைத்திருந்தார். இவர் பாரதியாரைச் சிறப்பித்துப் பாடும் இடத்தில், 'திங்களைக் கண்ணிலான் சிறப்பிப்பதுபோல நான் உன்னைச் சிறப்பிக்க வந்துளேன்' என்னுங் கருத்தமையப் பாடியுளார். இப் பகுதியில் பாவேந்தருடைய பணிவுள்ளம் ஒளி வீசுகின்றது.

### நன்றியுள்ளம்

இவர் தாம் இயற்றிய 'குடும்ப விளக்கு' இரண்டாம் பகுதியை, நிறைதமிழாய்ந்த மறைமலையடிகளுக்குக் காணிக்கையாக்கியிருக்கின்றார். சான்றோரை மதிக்கின்ற மனப்பான்மை இவரிடம் இருந்

தது என்பதற்கு இஃது ஒரு சான்ருகும். இனி, இவரிடம் ஈடுபாடு கொண்டிருந்த இளைஞர் ஒருவர்க்குத் தமது நூலொன்றைக் காணிக்கையாக்கியுள்ளார்.

க. பிச்சையன் என்னும் பெயருடைய இளைஞர், பாவேந்தரிடம் ஈடுபாடு கொண்டு, அவர்க்கு வேண்டிய பணிகளை மனமுவந்து செய்துவந்தார்; பாவேந்தர் நூல்களை அழகிய முறையில் கட்டடம் (*Bind*) அமைத்துக் கொடுப்பார் பாவேந்தர்க்குத் தமது நூல்களை அழகாக அச்சிடுவதிலும் அழகாகக் கட்டடம் செய்வதிலும் பேரார்வம் உண்டு. அதனுல் பிச்சையனிடம் பாவேந்தர் அன்பு வைத்திருந்தார். பிச்சையன், இளமையிலேயே நோய்வாய்ப்பட்டு இறக்க நேர்ந்தது. பாவேந்தர் இரங்கினுர்; இளைஞர் எனப் பாராது, தம் நூலொன்றைப் பாவேந்தர் பிச்சையனுக்குக் காணிக்கையாக்கினுர். பெரியவர் சிறியவர் என்று வேறுபாடு கருதாது, அன்பு ஒன்றையே கருதிப் பாவேந்தர் அதற்குக் கட்டுப்பட்டு விளங்கினுர்.

**மறதியுள்ளம்**

பாவலர்கள், எந்த நேரமும் நாட்டையே நினைத்துக் கொண்டிருப்பவர்கள்; வீட்டை மறந்து விடுவார்கள்; கற்பனை உலகில் திரிந்துகொண்டிருப் பார்கள்; இந்த உலகை மறந்துவிடுவார்கள்; சுருங்கக் கூறின் தம்மையே மறந்துவிடுவார்கள். தம்மை மறந்த நிலை, பாவேந்தர் வாழ்வில் பலமுறை நிகழ்ந்திருக்கிறது. பாவேந்தர் ஒரு முறை ஒரு கல்லூரிக்குக் கவியரங்க நிகழ்ச்சிக்காக வந்திருந்

தார்; விடியற்காலேயே வந்துவிட்டார். நிகழ்ச்சி மாலேயில்தான். அதுவரை இவர் ஓர் அறையில் ஒரு பலகையில் படுத்துக்கொண்டார். தலேக்கு ஒன்றும் வைத்துக் கொள்ளாமல், கையை மடக்கித் தலேக் கடியில் வைத்தவண்ணம் படுத்திருந்தார்.

இவரைக் காண வந்தவர்களிடம், கல்லூரி யில் யாருமே தம்மைக் கவனிக்கவில்லே என்று இவர் வருத்தப்பட்டுக்கொண்டார். பாவேந்தருக்கு அருகில் ஒரு பெட்டியும், அதன்மேல் தலேயணேயுடன் கூடிய படுக்கையும் இருப்பதை வந்தவர்கள் சுட்டிக் காட்டினர். 'அடடே! நான்தான் கொண்டுவந்தேன்; மறந்துவிட்டேன்' என்று கூறித் தலேயணேயை எடுத்து வைத்துக்கொண்டார். இத்தகைய வேடிக்கை நிகழ்ச்சிகள் அவர் வாழ்வில் எவ்வளவோ நடை பெற்றிருக்கின்றன.

தமிழ் நெஞ்சம்

பாவேந்தர் தமிழின் உருவமாகவே விளங்கிஞர் என்று சொன்ஞல் அது மிகையாகாது. தமிழ் என்ருல் அவருக்கு எவ்வளவு ஆசையோ?

'உடல் உயிர் செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான்'

என்று பாவேந்தர் பாடுகின்ருர். இவ்வடிகளால் தாம் வேறு, தமிழ் வேறு எனும் வேறுபாடேயின்றி, தமிழாகவே தம்மைக் கருதும் நெஞ்சம் நமக்குத் தெரிகிறது. ஏனெனில், உடலேயும் உயிரையும் தமிழுக்கென்றே ஒப்படைத்துவிட்டார் பாவேந்தர்.

மற்றோரிடத்தில் இவர்.

ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் ஈவேன்'

என்று பாடுகின்றார்.

## இறுதிநாள்

தமிழே வடிவமான பாவேந்தர் சிலர் சொல்லை நம்பித் தமது 'பாண்டியன் பரிசு' என்னும் காப்பியத்தைத் திரைப்படமாக்கக் கருதிச் சென்னைக்குச் சென்று, பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகி, 21—4—1964இல் நம்மை விட்டுப் பிரிந்தார். கனக சுப்புரத்தினம், பாரதிதாசனாகி, பிறகு புரட்சிக் கவிஞராகி, முடிவில் பாவேந்தராகித் தம் புகழ் நிறுத்தித் தாம் மறைந்துவிட்டார். அவர்தம் பிரிவால் வாடிய தமிழ்மக்களுக்கு, அவருடைய பாடலே ஆறுதல் தந்தது. ஆறுதல் தந்த அந்த மொழி, 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்பதே.

# கட்டுரைப் பயிற்சி

பின்வரும் பொருள்கள் குறித்துக்
கட்டுரை எழுதிப் பழகுக:

1. வேதநாயகரின் இளமை நிகழ்ச்சிகள்
2. அரசியல் அலுவலில் வேதநாயகர்
3. வேதநாயகர் நீதிநாயகர்
4. வேதநாயகரின் இசைப்புலமை
5. வேதநாயகரின் சீரிய தொண்டுகள்
6. தேசிகவிநாயகரின் இளமைப்பருவம்
7. நல்லாசிரியர் தேசிகவிநாயகர்
8. கவிமணி நூல்களின் சிறப்புகள்
9. குழந்தைக் கவிஞர் தேசிகவிநாயகர்
10. தேசிகவிநாயகரின் சீரிய பண்புகள்
11. பிறவிக் கவிஞர் பாரதியார்
12. பாரதியாரின் சென்னை வாழ்வு
13. புதுவையில் பாரதியார்
14. பாரதியாரின் நண்பர்கள்
15. பாரதியார் தேசியக் கவிஞர்
16. பாரதிதாசனின் கல்வியும் புலமையும்
17. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
18. பாவேந்தரின் படைப்புகள்
19. பாரதிதாசனின் பண்புநலம்
20. பாரதியாரும் பாரதிதாசனும்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

விலை : 80 காசு